வானவில்
VAANAVIL
இதழ்132 | மார்கழி 2021
ISSUE 132 | DECEMBER 2021

# ஐக்கியம் முழுமையானதாகவும் மனப்பூர்வமானதாகவும் இருக்க வேண்டும்!

**அ**ண்மையில் கொழும்பில் கூடிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளும், வேறு சில தமிழ் உதிரிக் கட்சிகளும், சிறீலங்கா முஸ்லீம் காங்கிரசும், மனோ கணேசனின் முன்னணியும் தமிழ் பேசும் மக்களிடையே ஒற்றுமை உருவாகிவிட்டது எனப் பிரகடனம் செய்துள்ளன.

அவர்களது இந்தப் பிரகடனத்தைப் பார்க்கும் போது, சில கட்சிகள் மட்டும் கூடிப் பேசினால், முழுத் தமிழ் பேசும் மக்களினதும் ஐக்கியம் உருவாகி விடுமா என்ற கேள்வி எழுகின்றது. வடக்கு கிழக்கில் செயல்படுகின்ற ஏனைய முக்கிய கட்சிகளான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி, மலையகத்தின் பிரதான கட்சியான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், முஸ்லீம் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் இன்னொரு கட்சியான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன ஏன் இந்த தமிழ் கட்சிகளின் கூட்டத்தில் பங்குபற்றவில்லை. அவர்கள் அழைக்கப்படவில்லையா? அல்லது அழைத்தும் அவை பங்குபற்றவில்லையா? இந்தக் கட்சிகளை சில்லறைக் கட்சிகள் என ஒதுக்கிவிட முடியாது. ஏனெனில் இக்கட்சிகளுக்கும் 10 இற்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

இது ஒரு புறமிருக்க, இந்தக் கூட்டம் கூட்டப்பட்டதன் நோக்கம், அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, அதன் அடிப்படையில் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளை இயங்க வைப்பதை இந்தியா மூலம் இலங்கை அரசாங்கத்துக்கு வலியுறுத்துவதே



எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1987 இல் இந்தியாவும் இலங்கையும் கைச்சாத்திட்டு உருவாக்கப்பட்ட இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் மூலமே 13 ஆவது திருத்தச் சட்டம் இலங்கை அரசியல் அமைப்பில் சேர்க்கப்பட்டது. அந்தத் திருத்தத்தின் அடிப்படையிலேயே மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. மாகாண சபைகள் உருவாக்கத்தின் பிரதான நோக்கம் வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களுக்கு அதிகாரப் பகிர்வினை வழங்குவதை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும், தனியே வடக்கு கிழக்கிற்கு மட்டும் அதை உருவாக்கினால், அது சிங்கள மக்களின் எதிர்ப்பைக் கிளறி விட்டுவிடும் எனக் கருதியதால் முழு நாட்டுக்குமாக 9 மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. எனவே, மாகாண சபைகள் ஒரு பக்கத்தில் தமிழ் பேசும் மக்களுக்கான அதிகாரப் பகிர்வாகவும், மறு பக்கத்தில் முழு நாட்டு மக்களுக்குமான பிராந்திய ரீதியிலான அதிகாரப் பகிர்வாகவும் அமைந்தது. இது ஓரளவுக்கு சிறப்பான அதிகாரப் பகிர்வு ஏற்பாடு எனலாம். மாகாண சபைகள் உருவாகி 34 வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால் மற்றைய எல்லா மாகாண சபைகளும் சீராக இயங்கிய போதிலும், முக்கியமாக இயங்க வேண்டிய வடக்கு கிழக்கு மாகாண சபைகள் ஒழுங்காக இயங்கவில்லை.

மாகாண சபைகள் உருவாக்கப்பட்ட பொழுது தெற்கில் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் எதிர்த்தன. ஜே.வி.பி. இதை அடிப்படையாக வைத்து 1988 – 89 காலப் பகுதியில் இரண்டாவது ஆயுதக் கிளர்ச்சி ஒன்றையும் நடத்தியது. பின்னர் மாகாண சபைத் தேர்தல்களில் அது பங்குபற்றிய போதிலும், மாகாண சபைகளைக் கலைத்துவிட வேண்டும் என்பதே இன்றும் அதன் நிலைப்பாடாக உள்ளது. அது மட்டுமின்றி, வடக்கு கிழக்கில் வாழுகின்ற தமிழ் மக்களை ஒரே தேசிய இனமாக ஒன்றிணைந்த வட கிழக்கு மாகாண சபை பிரதிநிதித்துவப்படுத்தியதால், ஜே.வி.பி. அதற்கு எதிராக நீதிமன்றத்தில்

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க…

# இந்திய விவசாயிகளின் போராட்டம் மாபெரும் வெற்றி

பாரதிய ஜனதாக்கட்சி–நரேந்திர மோடி தலைமையிலான இந்திய மத்திய அரசு கடந்த ஆண்டு புதிதாக 3 விவசாய சட்டங்களைக் கொண்டு வந்தது. இதனை எதிர்த்து முதல் சில மாதங்கள் பஞ்சாப், ஹரியானா, உத்தரப்பிரதேசம், உத்ரகாண்ட, தெலுங்கானா போன்ற மாநிலங்களில் போராட்டங்களைத் தொடங்கிய விவசாயிகள், பின்னர் இந்தியத் தலைநகர் டெல்லியை முற்றுகையிட்டனர். முதலில் விவசாய சட்டங்களை இரத்து செய்வதென்ற பேச்சுக்கே இடமில்லை என்றே இந்திய ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் கூறி வந்ததால், விவசாயிகள் தங்கள் போராட்டத்தை கைவிடாது, 26.11.2020 முதல் 09.12.2021 வரை ஓர் ஆண்டிற்கு மேலாகத் தொடர்ந்தனர். 40 விவசாய சங்கங்களின் ஒருங்கிணைப்பு அமைப்பாக இருக்கும் 'சம்யுக்தா கிசான் மோர்ச்சா' (Samyukta Kisan Morcha) இப்போராட்டத்தை வழி நடத்தியது.

750 இற்கும் மேற்பட்ட உயிர்களைப் பலிகொடுத்து விவசாயிகள் உறுதியாகப் போராடியதன் விளைவாக, மத்திய அரசு கடந்த மாதம் (19.11.2021) 3 விவசாய சட்டங்களையும் இரத்து செய்வதாக அறிவித்தது. இருப்பினும், விவசாயிகள் இது குறித்து பாராளுமன்றத்தில் முறையாகச் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்றும், விவசாயிகள் மீது தொடரப்பட்ட வழக்குகளையும் திரும்பப் பெற வேண்டுமெனவும் வலியுறுத்தி போராட்டத்தைக் கைவிட மறுத்தனர். இதன் காரணமாக, பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரின் முதல் நாளில் விவசாய சட்டங்கள் இரத்து செய்யும் மசோதா நிறைவேற்றப்பட்டது. அதேபோல வழக்குகளை இரத்து செய்வது குறித்தும் மத்திய அரசு உறுதி அளித்தது. இந்தச் சூழலில் தான் விவசாயிகள் தங்கள் போராட்டத்தை முடித்துக் கொள்வதாக டிசம்பர் 9ம் திகதி அறிவித்தனர்.

பஞ்சாப் பிரிவினைவாத அமைப்பான காலிஸ்தான் தீவிரவாத சக்திகளின் பின்னணி, வெளிநாட்டு சக்திகளின் சதி, மாவோயிஸ்டுகளின் தூண்டுதல் என்று முத்திரை குத்துவதன் மூலம் விவசாயிகளின் போராட்டத்தை சட்டவிரோதமாக்குவதற்கு மோடி அரசும் அதன் ஆதரவு ஊடகங்களும் தங்களால் இயன்றவரை முயற்சித்தார்கள். இந்தியன் எக்ஸ்பிரஸ், டைம்ஸ் ஆஃப் இந்தியா உட்பட ஏறக்குறைய அனைத்துத் செய்தித்தாள்களும், போராட்டக்காரர்களை கிராமப்புறவாசிகள் என்று ஏளனமாகக் கூறின. ஆனாலும், போராட்டக்காரர்களையும் அவர்களின் நியாயத்தையும் சிறிதும் அசைக்க முடியவில்லை.

டெல்லியில் குவிந்திருந்த விவசாயிகள் மீது பொலிசாரைக் கொண்டு தடியடி, நீர்த்தாரைகைப் பிரயோகம், கண்ணீர் புகைக்குண்டுத் தாக்குதல்களை நடத்தினார்கள். டெல்லியை நோக்கி வரும் வீதிகளில் தடுப்புச்சுவர்களை எழுப்பி, குழிகளை வெட்டி, கூர்மையான ஆணிகளை நட்டார்கள். இதன் உச்சக்கட்டமாக ஒக்ரோபர் 3ம் திகதி லக்கிம்பூரில் படுகொலைகள் அரங்கேறின. உத்தரப்பிரதேச மாநிலத்தின் லக்கிம்பூர் மாவட்டத்திலுள்ள சம்பூர்ண நகரில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில், விவசாயிகள் போராட்டத்தை ஒழித்துக்கட்டும் நோக்கில் பகிரங்கமாக மிரட்டல் விடுத்துப் பேசினார், மத்திய உள்துறை இணையமைச்சர் அஜய் மிஸ்ரா. இந்தப் பேச்சைக் கண்டித்து அமைதியாக ஊர்வலம் சென்று கொண்டிருந்த விவசாயிகள் மீது, அஜய் மிஸ்ராவின் மகன் ஆஷிஷ் மிஸ்ரா வெறித்தனமாக காரால் மோதியதில் 4 விவசாயிகள், ஒரு பத்திரிகையாளர் உட்பட 8 பேர் கொல்லப்பட்டனர், பலர் காயமடைந்தனர்.

கொவிட் தொற்று நோயின் உச்சத்தில் மிக நீண்ட காலம் நடந்துள்ள இந்திய விவசாயிகளின் போராட்டம் பொதுவாக உலகின் அனைவரினதும் கவனத்தையும் ஈர்த்தது. வன்முறையற்ற அமைதியான வழியில் விவாசாய இயக்கங்கள் போராட்டத்தை நடத்திச் சென்றது மிகவும் பாராட்டுதலுக்கு உரியது. அவர்கள் அப்படி கடைப்பிடித்த அறவழிப் போராட்டத்திற்கு கிடைத்த பெரு வெற்றிதான் இது. இந்திய நாட்டின் சுதந்திரப் போராட்டத்துக்குப் பின்னர், இதுவே நெடுநாட்கள் நடைபெற்ற அமைதியான போராட்டமாகும். விவசாயிகளை வறுமையில் வைத்திருப்பதையே நோக்கமாகக் கொண்ட பொருளாதார சிந்தனைக்கு விவசாயிகளால் சவால் விடுக்க முடிந்துள்ளது. உண்மையில் இது மிகப்பெரிய சாதனை ஆகும்.

சரியாக ஒரு வருடத்திற்கு முன்னர், **வானவில் இதழ் 120** இன் தலையங்கத்தின் இறுதிப்பகுதியில் குறிப்பிட்டதை மீள நினைவு கூர்வது தற்போது பொருத்தமானது: 'பல இலட்சக்கணக்கான விவசாயிகள் கடும் குளிரையும் பொருட்படுத்தாது திறந்தவெளியில், இரவும் பகலும் உட்கார்ந்து இதற்கெதிராக வீரத்துடன் போராடிக்கொண்டு இருக்கிறார்கள். இது இந்திய வரலாற்றில் விவசாயிகளின் மிக நீண்டதொரு போராட்டமாக இருக்கும். இதன் மூலம் விவசாயிகள் யார் என்பதை நிரூபிப்பார்கள் என்பதை நிட்சயமாக நம்பலாம்.'

இந்தியாவின் 70% கிராமப்புற குடும்பங்கள் விவசாயத்தை நம்பியே வாழுகின்றார்கள். இவர்களில் 86% பேர் ஐந்து ஏக்கருக்கும் குறைவான நிலம் கொண்ட சிறுவிவசாயிகள். அவர்களைப் பாதிக்கும் எந்தவொரு பிரச்சனையும் ஒட்டுமொத்த இந்தியாவைப் பாதிக்கவே செய்யும்.

விவசாயிகளுக்கும் சாதாரண நுகர்வோருக்கும் இழப்பை ஏற்படுத்தி, பெரும் மூலதனத்தைக் கொண்ட நிறுவனங்களுக்கு இலாபத்தை வழங்குகின்ற வகையில் புதிய சட்டங்களை கொண்டுவர முயற்சி செய்து அரசாங்கம் தோற்றுப்போயுள்ளது. எனினும் சட்டங்களைத் திரும்பப் பெற்றிருப்பதென்பது விவசாயிகளின் போராட்டத்தில் கிடைத்துள்ள வெற்றியின் முதற்படியாகவே கருதப்படுகின்றது. சர்ச்சைக்குரிய விவசாயச் சட்டங்களைத் திரும்பப் பெறுவது என்பது, விவசாயிகள் தற்போதிருக்கும் நிலைக்கே மீண்டும் திரும்புவதாகும்.

இந்த வெற்றியின் மூலம் ஏற்கனவே கடுமையான நெருக்கடியில் வாழ்ந்து கொண்டிருக்கும் விவசாயிகளுக்கு உடனடியாக விடிவு எதுவும் கிடைக்கப் போவதில்லை. சிறுவிவசாயிகள் வறுமையில் உழல்வதற்கான முக்கிய காரணம், அறுவடை மோசமாக இருப்பது மட்டுமல்ல. தங்கள் விளைபொருட்களுக்கான நியாயமான விலை கிடைப்பதில்லை என்பதும் அவர்கள் எதிர்நோக்கும் இன்னுமொரு பாரிய பிரச்சனையாகும். குறைந்த விலையில் பொருட்களை வாங்குகின்ற வர்த்தகத்தால் விவசாயிகள் சுரண்டப்படுவதை முடிவுக்குக் கொண்டு வந்து, குறைந்தபட்ச ஆதார விலையை விவசாயிகளுக்கான சட்டப்பூர்வமான உரிமையாக மாற்றுவதனூடாகவே மாத்திரமே விவசாயிகளுக்கான வாழ்வாதாரம் உறுதி செய்யப்படும்.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ **இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.**

# பாதுகாப்பு மற்றும் சிவில் நிர்வாகங்களுக்கிடையில் உள்ள வேறுபாடு புரிந்து கொள்ளப்பட வேண்டும்!



கல்விச் சீர்திருத்த இராஜாங்க அமைச்சர சுசில பிரேமஜயந்த 'டெயிலி மிரர்' பத்திரிகைக்காக கெலம் பண்டாரவுக்கு அளித்த பேட்டி: (நொவம்பர் 25.2021)

**சமீபத்தில் பின்லாந்தில் கல்வி அமைப்பு சம்பந்தமான ஒரு பயிற்சிப் பட்டறை நடைபெற்றது. அங்கே எமது கல்வி முறையை பின்லாந்து மாதிரியை ஒட்டி சீரமைப்பது பற்றிப் பேசப்பட்டது. இதை எப்படிச் செய்யப் போகிறீர்கள்?**

நாங்கள் எங்கள் கல்வியை வேறு எந்தவொரு நாட்டினதும் கல்வி முறையைத் தழுவிக் கொண்டிருக்கவில்லை. அது ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சில அமைப்புகளால் நிதியுதவி அளிக்கப்படும் SESIP என்ற திட்டமாகும். அவர்கள் பின்லாந்திலிருந்து ஒரு தொகை கல்வியாளர்களை இலங்கைக்கு வரவழைத்து, எமது கல்வி அமைப்பை ஆராய்ந்து, அவசியமேற்படின் தேசிய கல்வி நிறுவனத்துடன் கருத்துப் பரிமாற்றம் செய்யும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தினார்கள். அந்தப் பயிற்சிப் பட்டறை முன்னேற்றத்தில் உள்ளது. இதன் அர்த்தம் எமது கல்விச் சீர்திருத்தத்தை பின்லாந்தின் கல்வி முறையை அடியொற்றுவது அல்ல.

**எப்படியாயினும் அதிலிருந்து ஏதாவதைப் பெறும் திட்டம் உங்களுக்கு உள்ளதா?**

ஆம். எந்த நாட்டைப் பொறுத்த வரையிலும் மூன்று ஆதாரத் தூண்களாக – அறிவு, ஆற்றல், நோக்கு என்பனவற்றைக் கொண்டிருக்கிறோம். எமது நாட்டைப் பொறுத்த வரையில் நாம் செழுமையான அறிவைக் கொண்டிருக்கிறோம். நோக்கங்களும் அவ்வளவு பழுதல்ல. எம்மைப் பொறுத்தவரையில் திறமை பற்றி கவனம் செலுத்த வேண்டியவர்களாக உள்ளோம். பிள்ளைகள் ஒவ்வொரு மட்டத்திலும் – ஆரம்பக் கல்வி, உயர்தரக் கல்வி, அடுத்ததாக உள்ள கல்வி அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் அவர்களது நிலை நடைமுறையில் இல்லை. அதனால் அவர்களுக்கு திறமை தேவை. கல்வியில் பிரதானமாகக் கவனம் செலுத்தப்பட வேண்டியது திறமை பற்றியே ஒழிய அறிவைக் குறைப்பதை அல்ல. உங்களுக்கு அறிவு தேவை. நாங்கள் அறிவைப் பேண வேண்டும். திறமையை முன்னேற்ற வேண்டும்.

**அந்த வகையில் பின்லாந்து கல்வி முறையில் அதன் ஒன்றிணைப்பு எப்படி உள்ளது?**

பின்லாந்து கல்வியில் உலகில் முதல் நிலையில் உள்ளது. அங்கு பல குறிப்பிடக்கூடிய விடயங்கள் உள்ளன. நீங்கள் சிங்கப்பூர், வியட்நாம் நாடுகளைப் பாருங்கள். அவர்கள் 21ஆம் நூற்றாண்டுச் சவால்களை எதிர்நோக்கும் வகையில் தமது பாரம்பரிய கல்வி முறைகளை மாற்றி அமைத்துள்ளனர். நாங்கள் 21ஆம் நூற்றாண்டின் மூன்றாவது தசாப்தத்தில் இருக்கிறோம். பிரித்தானியர் எமக்கு வழங்கிய கல்வி முறையையே நாம் தொடர்ந்து கொண்டிருக்கிறோம். பிரித்தானியாவில் அவர்கள் நிறைய மாற்றங்களைச் செய்திருக்கிறார்கள். அவர்கள் விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம் என்பனவற்றில் Steam கல்வியை அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். இதுவரை நாங்கள் அதைச் செய்யவில்லை. இந்தச் சீர்திருத்தங்களின் போது நாங்களும் அதை அறிமுகப்படுத்த வேண்டும். நாங்கள் எமது கலாச்சாரம், வரலாறு, புவியியல், பிரஜைகளுக்கான கல்வி என்பனவற்றுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். அங்கே அவைகள் உள்ளன. மாணவர்களும், ஆசிரியர்களும், பெற்றோரும் பரீட்சைகளிலேயே மிகவும் கூடுதலான கவனத்தைச் செலுத்துகின்றனர். எமது கல்வி முறை பரீட்சைகளில் முடிவடைகிறது. அதன் விளைவாக நாம் கூடுதலான போட்டி, கடுமையான பாட விதானம், பாடத் திட்டம் என்பனவற்றை எதிர் கொள்கின்றோம். மாணவர்கள் சாதாரண கல்விக்கு அப்பால் பிரத்தியேக வகுப்புகளை நாடுகின்றனர். இது மாணவர்களை கடுமையான மன அழுத்தத்துக்குக் கொண்டு செல்கிறது. வளர்ச்சி அடைந்த நாடுகளில் அவர்கள் பரீட்சைகளின் சுமையைக் குறைத்துள்ளனர். நாமும் அந்தச் சுமையைக் குறைக்க வேண்டும். நாங்கள் பாடப் புத்தகங்களின் சுமையைக் குறைக்க வேண்டும். நாங்கள் வகுப்பறைகளில் மதிப்பீடுகளை அறிமுகப்படுத்த வேண்டும். பரீட்சைகளை வழமை போல நடத்துகின்ற அதே வேளையில் சிறிய மாற்றங்களைச் செய்ய வேண்டும். கல்வி என்பது பிள்ளைகளை மையப்படுத்தி இருக்க வேண்டும். அந்நியமான முறைகளை நாம் பிரதி பண்ணத் தேவையில்லை.

**தேசிய பரீட்சைகளில் என்ன மாதிரியான மாற்றங்கள் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது?**

எம்மிடம் விஞ்ஞான மற்றும் அழகியல் பாடங்களுக்கு மட்டுமே நடைமுறைச் செயற்பாடுகள் உள்ளன. நாம் அழகியல் பாடங்களுக்கு நடைமுறைச் சோதனைகளை நடத்துகிறோம். 1972இன் பின்னர் அத்தகைய சோதனைகள் விஞ்ஞானப் பாடங்களுக்கு

இருக்கவில்லை. ஆனால் நடைமுறை செயல்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கேள்விகள் பரீட்சை வினாத்தாள்களில் உண்டு. இந்தத் துறையை மேம்படுத்த வேண்டிய தேவை எமக்குண்டு. மாணவர்கள் தமது வகுப்பறைகளில் இந்த நடைமுறைகளைக் கற்றுக் கொண்டால், அவர்கள் தமது பட்டப் படிப்பை முடித்து வேலை பெற்ற பின்னர் அதைப் பிரயோகிப்பார்கள். பல்கலைக்கழகத்துக்கு தேர்வு செய்யப்படுபவர்களில் 70 சத வீதத்துக்கு அதிகமானோர் கலைத் துறைக்கே தேர்வாகிறார்கள். ஆயிரக்கணக்கான பட்டதாரிகள் பல்கலைக்கழகங்களில் கல்வியைப் பூர்த்தி செய்கிறார்கள். ஆனால், அவர்களால் தொழில் போட்டிகளுக்கான தேவையைப் பூர்த்தி செய்ய முடிவதில்லை. அதை நாம் மாற்ற வேண்டும்.

நாம் உள்ளூர் அடிப்படையிலான விருப்பப் பாடங்களை அறிமுகம் செய்ய வேண்டும். உதாரணமாக, பெருந்தோட்டத் துறையை எடுத்துக் கொண்டால், தேயிலை என்றால் என்ன, தேயிலைக் கைத்தொழில் என்றால் என்ன, எப்படி நாம் தேயிலையை உற்பத்தி செய்கிறோம் என்பவை பற்றி இருக்க வேண்டும். இரத்தினக்கல் துறையை எடுத்துக் கொண்டால் அவர்களுக்கு அவற்றின் விஞ்ஞானம் தெரியாது. ஒவ்வொரு உள்ளூரிலும் விசேடமான விருப்பத்துக்குரிய பாடங்கள் உள்ளன. அவர்கள் அதில் ஒன்றைத் தெரிவு செய்யலாம். எமது கல்வியாளர்கள் இப்பொழுது தேயிலை மற்றும் இறப்பர் போன்ற ஆராய்ச்சி நிறுவனங்களில் பணியாற்றுகின்றனர்.

**தொடர்ந்து பதவியில் இருந்த அரசாங்கங்களின் கீழ் கல்வி சீர்திருத்தங்கள் சம்பந்தமாக பல வருடங்களாக பேசப்பட்டு வந்தன. ஆனால் நடைமுறையில் எதுவுமே நடைபெறவில்லை. எப்படி இப்பொழுது அதன் நடைமுறைச் சாத்தியம் உள்ளது?**

அவர்கள் இதைச் செய்வதற்குப் பயந்தார்கள். 1962இல் தனியார் பாடசாலைகளைத் தேசியமயமாக்கிய கல்விச் சட்ட மூலத்தை அறிமுகம் செய்த நிலைமையை எடுத்துப் பார்க்கையில் இது ஒரு மாபெரும் பணி. சில சர்வதேசப் பாடசாலைகள் கடந்த இரண்டு தசாப்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவர்கள் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பாடத் திட்டங்களை வழங்குகிறார்கள். இது ஒரு கலவை. எல்லா பொது, தனியார் மற்றும் சர்வதேசப் பாடசாலைகளுக்கும் ஒரு தெளிவான திட்டத்தை வழங்குவதற்கு நாம் விரும்புகிறோம். சர்வதேச பாடசாலைகளை ஒழுங்குபடுத்துவதற்கு ஒரு பொறிமுறை இருக்க வேண்டும். தற்பொழுது தனியார் பாடசாலைகள் கல்வி அமைச்சினால் ஒழுங்குபடுத்தப்படுகிறது. சர்வதேச பாடசாலைகளைப் பொறுத்தவரையில் இப்படியான ஒழுங்குமுறை இல்லை. தேசிய கல்வி ஆணைக்குழுவும் இதில் பணியாற்றுகிறது. பல சர்வதேசப் பாடசாலைகள் எந்தவிதத் தராதரமும் இன்றி திறக்கப்பட்டுள்ளன. விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறைகளைப் பொறுத்தவரை அடுத்த இரண்டு மூன்று தசாப்த காலத்தில் சில நிபுணத்துவங்கள் இல்லாமல் போயிருப்பதை நீங்கள் காண முடியும். நாம் பிள்ளைகளை முறைப்படி வளர்த்தெடுக்க வேண்டும்.

**பிரதமர் மகிந்த ராஜபக்ச, ஆசிரியர்களின் போராட்டம் அரசியல் ரீதியாகக் கையாளப்படாததால் கட்டை மீறி இழுபட்டுச் செல்வதாகக் கூறியுள்ளார். இதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?**

கடந்த 24 வருடங்களாக இந்தப் பிரச்சினை இருந்து வருகிறது. நான் அமைச்சராக இருந்த 2005 மற்றும் 2010 ஆண்டுகள் காலத்தில் நாங்கள் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தினோம். நான் இப்பொழுது அந்த விடயத்துக்குப் பொறுப்பாக இல்லை. சமீபத்தில் நான் அதில் ஈடுபடவில்லை. என் சக்திக்கேற்ப எல்லாத் தரப்புகளும் ஒரு புரிந்துணர்வுக்கு வர உதவ முடியும். கடந்த ஒன்றரை வருட காலமாக கல்வி அதிகாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெறவில்லை. அதையே அவர் குறிப்பிட்டார். எந்தவித கலந்துரையாடலும் இல்லை. அதிகாரிகள் தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவார்களாக இருந்தால்,அதிக சேதமில்லாமல் எம்மால் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

நாங்கள் 21ஆம் நூற்றாண்டின் மூன்றாவது தசாப்தத்தில் இருக்கிறோம். பிரித்தானியர் அளித்த கல்வி முறையையே தொடர்கிறோம்.

**இதற்கு யாரைக் குற்றம் சாட்டுவது?**

கல்வி அதிகாரிகள், செயலாளர், மற்றைய அதிகாரிகள், அமைச்சர்களையும் கூட.

**வாழ்க்கைச் செலவுப் பிரச்சினை சம்பந்தமாக எதுவித நடவடிக்கையும் எடுக்காததால் வரவு செலவுத் திட்டத்தை மக்கள் விமர்சிக்கிறார்கள். இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

இந்த வரவு செலவுத் திட்டம் சுதந்திரத்துக்குப் பின்னரான காலத்தில் மிகவும் சிக்கல் வாய்ந்த சவாலுக்குரிய ஒன்றாகும். நான் சில பாரம்பரியமான வரவு செலவுத் திட்ட பிரேரணைகளுக்குச் செல்ல விரும்புகிறேன். 1973இல் டாக்டர் என்.எம்.பெரேரா சமர்ப்பித்த சட்ட மூலமும், 1978இல் அப்போதைய அமைச்சர் ரொனி டி மெல் சமர்ப்பித்த சட்ட மூலமும் சில திருப்பு முனைகளைக் கொண்டிருந்ததை நீங்கள் காணலாம். 1973 சட்ட மூலம் மூடுண்ட பொருளாதாரத்தைக் கொண்டிருந்ததால் விலைக் கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இறக்குமதிகளுக்குப் பல தடைகள் விதிக்கப்பட்டன. அப்பொழுது முழு உலகமும் எரிபொருள் நெருக்கடியை எதிர்நோக்கிக் கொண்டிருந்தது. எல்லா எண்ணெய் விலைகளும் இரண்டு மடங்காகின. இறக்குமதிகள் கட்டுப்படுத்தப்பட்டன. அதன் காரணமாக உணவுக்கு வரிசையில் நிற்க வேண்டி ஏற்பட்டது. அந்த நேரத்தில் நாங்கள் போதிய ஏற்றுமதி வருவாயைக் கொண்டிருக்கவில்லை. வெளிநாட்டில் வேலை செய்பவர்களிடமிருந்து வருவாயும் இருக்கவில்லை. அப்போதைய அரசாங்கம் சாத்தியமான அளவு இந்த நாட்டில் உற்பத்தி செய்யக்கூடியவற்றைச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தது. இதன் விளைவாக 1977இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசாங்கம் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்தது. ரொனி டி மெல் தனது முதலாவது வரவு செலவுத் திட்டத்தில் திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகம் செய்தார். அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் றீகன், பிரித்தானிய பிரதமர் மார்கிரேட் தட்ச்சர் ஆகியோரும் தாராளவாத சந்தைப் பொருளாதாரத்தை அறிமுகம் செய்த முன்னோடிகளாக இருந்தனர். ஐரோப்பிய நாடுகளில் இது ஓர் அலையாக இருந்தது. நாங்களும் திறந்த

பொருளாதாரத்துக்கு மாற முயன்றோம். அந்நியச் செலாவணி விகிதம் திடீரென இரண்டு மடங்காகியது. இருந்தும் சுதந்திர வர்த்தக வலயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இறக்குமதிகளுக்கு எந்தக் கட்டுப்பாடுகளும் இருக்கவில்லை. மற்றைய நாடுகளுடன் நாமும் இதை நடைமுறைப்படுத்தியதால் பேரழிவுக்கு உள்ளானோம்.

**சரி, நாம் மீண்டும் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவோம். அப்பொழுது மீண்டும் வரிசையில் நிற்கும் யுகம் உருவாகப் போகின்றது என மக்கள் அஞ்சுவார்கள். இது ஒரு நல்ல பொருளாதார மாதிரி என நீங்கள் கருதுகிறீர்களா?**

நான் அதைச் சொல்லவில்லை. கடந்த காலத்தில் என்ன நடந்தது என்பதையே நான் சுட்டிக் காட்டினேன். 40 வருடங்களாக திறந்த தாராளவாத மாதிரியைப் பின்பற்றிய பின்னர் உங்களால் வேறு சில மாதிரிகளுக்கு மாற முடியாது. தாராளவாதப் பொருளாதாரத்துடன் எவ்வாறு விலைக் கட்டுப்பாடுகளைப் பேண முடியும் என்பது எனக்குத் தெரியவில்லை. சந்தைப் பொருளாதாரமும் விலைக் கட்டுப்பாடும் ஒன்றாகக் கைகோர்த்துச் செல்ல முடியாது. நீங்கள் ஒரு மூடுண்ட பொருளாதாரத்தைக் கொண்டிருந்தால் உங்களால் விலைக் கட்டுப்பாட்டை அமுலாக்க முடியும். நாம் விலைக் கட்டுப்பாடு சம்பந்தமான வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிடுகின்றோம். அதனால் உணவுத் தட்டுப்பாடுதான் ஏற்படுகின்றது. பிறகு நாங்கள் எல்லா வர்த்தமானி அறிவித்தல்களையும் இரத்துச் செய்தோம். மீண்டும் விலைகள் உச்சத்துக்குச் சென்று விட்டன. எமது உற்பத்தியைப் பெருக்க நாம் என்ன செய்வது, எவ்வாறு நாம் உற்பத்தியைப் பெருக்குவது? அரிசி, மரக்கறிகள், மீன் என்பனவற்றின் உற்பத்தியைப் பெருக்க வேண்டிய தேவை எமக்கு உள்ளது. பசளை இன்றி இவற்றை எப்படி நாம் நிறைவேற்றுவது, சேதனப் பசளையாலா அல்லது இரசாயன பசளையாலா? விவசாயிகள் பசளைக்காக கிளர்ச்சி செய்கிறார்கள்.

**நீங்கள் கருதுவது பொருளாதாரத்தைக் கையாள்வதில் தவறிழைக்கப்படுகிறது என்பதையா?**

நாம் பேசிக் கொண்டிருப்பது



கல்வித்துறை சம்பந்தமான சீர்திருத்தங்கள் பற்றி. எனது கருத்தில் இந்த வகையான சீர்திருத்தங்களைக் கொண்டுவர குறைந்தபட்சம் பத்து வருடங்களாவது பிடிக்கும். உங்களால் இரண்டு மூன்று வருடங்களில் சீர்திருத்தங்களைக் கொண்டுவர முடியாது. நாங்கள் பல தசாப்தங்களாக இரசாயன உரங்களையும் கிருமிநாசினிகளையும் பயன்படுத்தி வருகின்றோம். நீங்கள் உயிரியல் விவசாயத்துக்குச் செல்வதானால் உங்களுக்கு கட்டாயமாக அந்தத் திட்டம் பற்றிய தெளிவு இருக்க வேண்டும். எமது நாட்டின் சனத்தொகையில் 65 வீதமானவர்கள் விவசாயிகள். 2015இல் நாம் அரிசி உற்பத்தியில் தன்னிறைவை அடைந்தோம். அடுத்து என்ன நடக்கிறது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். பிறகு, இங்கு சேதனப் பசளையை உற்பத்தி செய்வதற்கு நிச்சயமாகத் திட்டமிடுவோம். இதைச் செய்வதற்கு எமக்கு சில காலம் தேவை. சேதன விவசாயம் ஒரு நல்ல கருத்து. சர்வதேச சமூகம் இந்தக் கொள்கையை வரவேற்கும். பிரச்சினை அதை அமுல்படுத்துவதுதான்.

**இன்று நாட்டிலுள்ள தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளன. எதிர்க்கட்சி ஒழுங்கு செய்துள்ள ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்வதற்காக மக்கள் வீதிக்கு வந்துள்ளனர். ஏன் இவ்வாறான குழப்பம் நாட்டில் உருவாகியுள்ளது?**

நான் பொது நிர்வாகத்துறையில் முதுமானி படிப்பை 2004இல் முடித்தேன். சமீபத்தில் எனது பொது நிர்வாகம் சம்பந்தமான கலாநிதி படிப்பைப் பூர்த்தி செய்தேன். எனது கவனம் ஆட்சியியல் பற்றியது. அரசாங்கத்தை உருவாக்கிய பின் நாம் ஆட்சியியல் பற்றிய விடயங்களைக் கொண்டிருக்கிறோம். நீங்கள் ஒரு சரியான நபரை சரியான பதவிக்கு தெரிவு செய்துள்ளீர்கள். இது வெறுமனே அமைச்சரவைப் பதவிகளுக்கு மட்டுமின்றி, தலைவர், பணிப்பாளர்கள், இலாகா தலைவர்கள் மற்றும் செயலாளர்களுக்குமாகும். எத்தனை தலைவர்கள் இராஜினாமா செய்துள்ளனர்? எத்தனை செயலாளர்கள் மாற்றப்பட்டுள்ளனர்? நீங்கள் பாதுகாப்பு நிர்வாகத்துக்கும் சிவில் நிர்வாகத்துக்கும் உள்ள வேறுபாட்டை அவசியம் விளங்கிக் கொள்ள வேண்டும். பல ஓய்வு பெற்ற இராணுவத்தினருக்கு உயர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அவர்கள் தகுதியற்றவர்கள் என்று நான் சொல்ல வரவில்லை. தகுதியானவர்கள் இருக்கின்றனர். பிரச்சினை என்னவென்றால், இரண்டு வித்தியாசமான நிர்வாகங்கள் இருக்கின்றன. இது வர்த்தக நிறுவனங்களில் முற்றிலும் மாறுபாடானது. உதாரணமாக, கோப்பரேட் துறையில் உள்ள முன்னணி நிறுவனங்கள் தமது உயர் முகாமைத்துவத்துக்கு இவ்வாறு செய்கின்றனவா?

இதுதான் கோப்பரேட் துறையின் வெற்றி. இதுதான் பொதுத் துறையின் பலவீனம். கடந்த காலத்திலும் பதவியில் இருந்த அரசாங்கங்கள் இத்தகைய ஆட்களையே நியமித்தனர். கூட்டுத்தாபனங்களுக்கு என்ன நடக்கிறது? கடந்த காலத்தில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு தலைவராக நியமிக்கப்பட்டவர் கல்விப் பொதுத் தராதர பரீட்சையில் கூட சித்தி எய்தியிருக்கவில்லை.

**நீங்கள் இப்படிக் கருத்துக் கூறும் போது, அது அரச உயர் மட்டத்தை விமர்சிப்பதாக இருக்கும். நீங்கள் ஏன் அவர்களை விமர்சிக்கிறீர்கள்?**

இது அரசாங்கத்தை அல்ல, அவர்கள் எடுக்கும் சில தீர்மானங்கள் சம்பந்தமானது.

**நீங்கள் ஏன் அரசாங்கத்தை விமர்சிக்கிறீர்கள்?**

நாங்கள் இந்த அரசாங்கத்தை அதிகாரத்துக்கு கொண்டு வந்த மக்களில் ஒரு பகுதியினர். நாம் எமது நேரத்தையும் பணத்தையும் செலவிட்டுள்ளோம். நாம் மேடைகளில் பேசியுள்ளோம். நாம் மக்களுக்கு விடயங்களை விளக்கிக் கூறியுள்ளோம். எங்கள் வேட்பாளர்களுக்கு ஆதரவு தேடி பல கருத்தரங்குகளை நடத்தியுள்ளோம். ஆனால், நாங்கள் அந்த நேரத்தில் மக்களுக்குக் கூறிய கொள்கைகளில் சில முரண்பாடுகள் தோன்றியுள்ளதை நீங்கள் அவதானிக்க முடியும். இதுவே அரசாங்கத்தின் சில பகுதியினர் எடுக்கப்படும் தீர்மானங்களை விமர்சிப்பதற்குக் காரணம்.

**நீங்கள் அவர்களது விமர்சனங்களை நியாயப்படுத்துகிறீர்களா?**

நான் அதை நியாயப்படுத்தவில்லை. அவர்களும் இந்த அரசாங்கத்தை அதிகாரத்துக்கு கொண்டு வருவதில் பங்கு வகித்தவர்கள். நாங்கள் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் கூட்டரசாங்கத்தில் அங்கம் வகித்த காலத்தில் திரிகோணமலையில் உள்ள எண்ணெய் குதங்களை அபிவிருத்தி செய்வதற்காக LIOC உடன் ஒரு பங்காளி உடன்படிக்கை செய்ய முயற்சிக்கப்பட்டது. நாம் கடுமையாக அதை எதிர்த்தோம். அம்பாந்தோட்டை துறைமுகத்தை குத்தகைக்கு விடுவதையும் எதிர்த்தோம். ஒரு கொள்கை முடிவு எடுப்பதற்கு முன்பதாக பங்காளிக் கட்சிகளுடன் கலந்துரையாடலும் ஆலோசனையும் நடத்தி அவர்களது கருத்துகளைக் கேட்க வேண்டும். இப்படித்தான் முன்னைய கால ஆட்சியாளர்கள் நாட்டை ஆட்சி செய்தார்கள்.

**நீங்கள் முன்னைய அரசாங்கங்களுக்கும் தற்போதைய அரசாங்கத்துக்கும் இடையில் உள்ள ஆட்சி முறையை எவ்வாறு ஒப்பீடு செய்து பார்க்கிறீர்கள்?**

அதுதான் நாம் அப்போது அரசாங்கத்தை விட்டு வெளியேறக் காரணம். ஏனென்றால், அவர்களுடன் நாம் தொடர்ந்து இருக்க விரும்பவில்லை. இப்பொழுது, அது மிகவும் சிக்கலானது என நினைக்கிறேன். கடந்த காலத்தை எடுத்துப் பார்த்தால் நான் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் அவரின் கீழ் 10 வருடங்கள் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக இருந்துள்ளேன். நான்தான் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர். மூன்று ஜனாதிபதிகளின் வேட்பாளர் பட்டியலை நான் தயார் செய்துள்ளேன். நான் ஒரு தவறைக்கூட இழைக்கவில்லை. நாம் பொறுப்புடன் நடந்து கொண்டோம். அப்போதைய ஜனாதிபதியால் எமது வேலைகளில் எந்தத் தலையீடும் செய்யப்படவில்லை. அவர் எம்மை வேலை செய்ய அனுமதித்தார். எமக்கு சுதந்திரம் தரப்பட்டது.

**புதிய அரசியல் கூட்டணிகளுக்கான திட்டங்கள் இருப்பதாகக் கேள்விப்படுகிறோம். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திரும்பி வருவது பற்றி பேச்சுக்கள் அடிபடுகின்றன. இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

இதைப் பற்றிக் கருத்துக் கூறுவது காலத்துக்கு முந்திய ஒன்றாகும். நாளாந்த விவகாரங்களை நாம் கையாள்வது குறித்து மக்கள் மகிழ்ச்சியாக இல்லை என்பது உண்மையே. பெருந்தொற்றுக் காரணமாக சில முடிவுகளில் சிக்கல்கள் உள்ளன. இது ஒரு கடினமான கடமை. சுதந்திரத்துக்குப் பின்னரான காலத்தில் எந்தவொரு அரசாங்கமும் இத்தகைய சவாலை எதிர்நோக்கியது கிடையாது. இந்த எல்லாச் சவால்களுக்கும் முகம் கொடுப்பதற்காகவே மக்கள் எம்மைத் தெரிவு செய்தார்கள். நாம் அவற்றை ஏற்கும் நிலையில் இருக்க வேண்டும். இது அரசியல்வாதிகளின் கடமை. நீங்கள் மற்றவர்களுக்கு இருக்கும் பொறுப்பைக் கடந்து செல்ல முடியாது.

# ஐ.நாவின் எச்சரிக்கை!

2022 இல் கொவிட் பெருந்தொற்று, சுற்றுச்சூழல் மோசமடைதல், மோதல் போக்குகள் காரணமாக மேலும் பல மக்கள் பட்டினியை எதிர்நோக்க நேரிடும் என ஐ.நாவின் மனிதாபிமான முகவரகம் (Humanitarian Ageny) எச்சரிக்கை செய்துள்ளது. இதனால் உலக ரீதியாக 274 மில்லியன் மக்களுக்கு அவசர உதவி தேவைப்படும் எனவும் அது மதிப்பீடு செய்திருக்கிறது.

இதன் அர்த்தம், 29 பேரில் ஒருவருக்கு இந்த உதவி தேவைப்படும் என்பதாகும். 2015இல் இது 95 பேருக்கு ஒருவர் என்று இருந்தது. இப்பொழுது அது 250 சத விகிதத்தால் அதிகரித்திருக்கிறது என ஐ.நாவின் ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. “உதவி தேவைப்படும் மக்களின் தொகை இதற்கு முன்னர் இவ்வளவு உயர்வாக இருந்ததில்லை” என ஐ.நா. உதவி



Martin Griffiths

வழங்கும் நிறுவனத்தின் தலைவர் மார்ட்டின் கிறிஃப்பித்ஸ் (Martin Griffiths) தெரிவித்திருக்கிறார்.

63 நாடுகளைச் சேர்ந்த அதிகம் பாதிக்கப்படும் 183 மில்லியன் மக்களுக்கு உதவி வழங்குவதற்கு 41 பில்லியன் (4,100) டொலர்கள் தேவைப்படும். இத்தொகை 2021இல் 35 பில்லியனாக இருந்தது.

ஐ.நாவின் இந்த அறிக்கையில், மோதல்கள் காரணமாக ஸ்திரத்தன்மையை இழந்துள்ள ஆப்கானிஸ்தான், எத்தியோப்பியா, மியன்மார் என்பனவற்றின் நிலைமையும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. கொவிட் நோயின் தொடர்ச்சியும், இயற்கைப் பேரழிவுகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகளால் ஏற்பட்டுள்ள மக்களின் இடப்பெயர்வுகளும் மனிதாபிமான உதவியின் தேவைகளை அதிகரித்துள்ளன.

கொவிட் நோய்த் தாக்கத்தால் உலகளாவிய ரீதியில் உத்தியோகபூர்வ மதிப்பீடுகளின்படி 5 இலட்சம்

**தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க...**


# அமெரிக்காவினதும் சீனாவினதும் ஜனநாயகங்கள்!

சீனாவின் சோசலிச ஜனநாயகம் அமெரிக்காவின் முதலாளித்துவ ஜனநாயகத்தை விட உண்மையானதும் பலமானதும் என சீனாவின் அரசியல்வாதிகளும், ஆய்வாளர்களும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். சமீபத்தில் சீனா தனது நாட்டின் ஜனநாயக செயல்பாடுகள் குறித்து வெள்ளை அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அது பற்றி கருத்து வெளியிடுகையிலேயே சீனத் தரப்பினர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளனர். மேலும் அவர்கள் கூறுகையில், அமெரிக்காவில் அரசியல்வாதிகள் தமது நலன்களில் அக்கறையுள்ள குழுக்களையே பிரதிநிதித்துவம் செய்கின்றனர். ஆனால் சீனாவில் நடைமுறைப்படுத்தப்படும் கொள்கைகள் முழு நாட்டு மக்களினதும் நலன் கருதியே அமுல்படுத்தப்படுகின்றது எனவும் குறிப்பிட்டிருக்கின்றனர்.

அவர்கள் இரு நாடுகளிலும் செயல்படும் அரசமைப்பு முறைகளை ஒப்பீடு செய்து இதை விளக்கிக் கூறியுள்ளனர்.

அமெரிக்காவில் தேர்தல் காலத்தில் அரசியல்வாதிகள் எழுந்தமானமாக பல வாக்குறுதிகயைக் கொடுப்பர். ஆனால் தேர்தல் முடிந்த பின்னர் அவர்கள் மக்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. அவர்கள் பின்னர் தன்னலக் குழுக்களின் ஏஜண்டுகளாகச் செயற்படுவர். இதனால் ஏமாந்த மக்கள் இன்னொரு முறை ஏமாறுவதற்காக அடுத்த தேர்தல் வரை காத்திருப்பர். அங்கு அரசியல்வாதிகள் தாம் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றுகிறார்களா என பரீட்சித்துப் பார்ப்பதற்கு பொது மக்களுக்கு எந்த விதமான பொறிமுறைகளும் இல்லை. இவ்வாறு அமெரிக்க ஜனநாயகத்தைச் சாடியிருக்கிறார் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய குழுவின் கொள்கை ஆய்வு அலுவலகத்தின் பதில் பணிப்பாளர் ரியன் பெய்யான் (Tian Peiyan).

ஆனால் சீனாவில் மக்கள் ஜனநாயக செயற்பாடுகள் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழேயே நடைபெறுகின்றன. சீனாவில் மக்களால் அதிகாரம் வழங்கப்பட்ட கட்சி அங்கத்தவர்களும் தலைவர்களும் மக்களின் நலன்களுக்காகச் செயல்படுகிறார்களா என்று கண்காணிப்பதற்கு மக்களுக்கு வழிமுறைகள் உள்ளன என்றும் அவர் கூறினார். அத்துடன் அவர்கள் மக்களுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருப்பதுடன், அவர்களது கருத்துக்களுக்குச் செவி சாய்த்து அவர்களது கோரிக்கைகளை ஏற்று அவற்றைத் தீர்த்தும் வைக்கின்றனர் என்றார்.




**சங்கரன்**

அமெரிக்காவில் நிலவும் அரசியல் நிலைமைகளின்படி, அங்குள்ள சட்ட வகுப்பாளர்கள் தன்னலக் குழுக்களுக்காகவும், அழுத்தம் கொடுக்கும் குழுக்களுக்காகவுமே செயலாற்றுகின்றனர். ஆனால் சீனாவைப் பொறுத்தவரையில், அரசியல் அமைப்பு ரீதியாகவும், தேர்தல் சட்ட விதிக்கமையவும் தேசிய மக்கள் காங்கிரசுக்கும் (National People's Congress) மற்றைய எல்லா மட்ட நிர்வாகங்களுக்கும் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் வாக்காளர்களினாலும், அடிப்படையான தேர்தல் குழுக்களாலும் நிச்சயமாக கண்காணிக்கப்படுவர். அவர்களது அவதானிப்புக்கு இணங்க அவர்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை மீளவும் திருப்பி அழைக்கும் உரிமை வாக்காளர்களுக்கும் தேர்தல் குழுக்களுக்கும் உண்டு என தேசிய மக்கள் காங்கிரசின் நிரந்தரக் குழு உறுப்பினர் ஹோ (Guo) குறிப்பிட்டார்.

அதேநேரத்தில் சீனாவின் ஜனநாயக முறை மக்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதற்கும், பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்குமான வழிமுறைகளையும் கொண்டிருக்கிறது.

தேசிய மக்கள் காங்கிரசின் கூட்டங்களின் போது அதன் 3,000 பிரதிநிதிகள் மக்களின் வாழ்க்கை நிலைமைகள் சம்பந்தமாக ஆயிரக்கணக்கான பிரேரணைகளை முன் வைக்கின்றனர். பாடசாலைப் பிள்ளைகளின் அளவுக்கதிகமான வீட்டு வேலையைக் குறைத்தல், பல்கலைக்கழக மாணவர்களுக்கு படிப்பின் பின்னர் கட்டாயமாக வழங்கப்படும் போதனையை குறைத்தல், உணவு விநியோக

ஊழியர்களின் தொழிலை இலகுபடுத்தி மேம்படுத்துதல் போன்றவை அவற்றுக்குள் அடங்கும்.

அமெரிக்கா தனது ஜனநாயகம் பற்றிப் பெரிதாகப் பீற்றிக் கொண்டாலும், கொவிட் பெருந்தொற்றுக் காலத்தில் அதைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளைத் துரிதமாக எடுப்பதற்குப் பதிலாக சீனா மீது அபாண்டக் குற்றச்சாட்டுகளை சுமத்துவதிலேயே அரசியல் நோக்கம் கருதிக் கவனம் செலுத்தியது. அதன் காரணமாக சுமார் 50 மில்லியன் மக்கள் அந்த நோய்க்கு ஆளானதுடன், 8 இலட்சம் பேர் வரை மரணமும் அடைந்தனர். ஆனால் சீனா மிகக் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு பிறந்த குழந்தையிலிருந்து 100 வயதுக்கு மேற்பட்டவர்கள் வரை தனது ஒவ்வொரு பிரசையையும் காப்பாற்றுவதில் கவனம் செலுத்தியது.

அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான தேர்தல் முறையை எடுத்துக் கொண்டால், சீனாவில் அரசியல் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் நாட்டின் அதியுயர் அரசியல் சபையான தேசிய மகள் காங்கிரசுக்கு (நாடாளுமன்றம்) மக்கள் நேரடியாக வாக்களிக்கும் 12 தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்தத் தேர்தல்கள் எல்லாவற்றிலும் ஏறத்தாழ 90 வீதமான மக்கள் வாக்களித்துள்ளனர். ஆனால் அமெரிக்காவில் 2020இல் நடந்த தேர்தலில் தகுதி பெற்ற வாக்ககாளர்களில் 66.3 வாக்காளர்களே வாக்களித்துள்ளனர்.

சீனாவின் தேசிய மக்கள் காங்கிரசுக்கு நாட்டின் ஒவ்வொரு பிராந்தியத்திலிருந்தும், ஒவ்வொரு தொழில் துறையிலிருந்தும், ஒவ்வொரு பகுதியிலிருந்தும், எல்லா தேசிய சிறுபான்மை இனங்களிலிருந்தும் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுகின்றனர். ஆனால் அமெரிக்காவில் முழு நாட்டு மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்குப் பதிலாக தன்னலக் குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகளே தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுகின்றனர்.


சீனாவில் தேர்தல் செலவுகளுக்கான நிதியைப் பொறுத்தவரையில், தேசிய மக்கள் காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கு திறைசேரியிலிருந்து வழங்கப்படும் பணம் எந்தக் காரணம் கொண்டும் தேர்தலில் பயன்படுத்தப்படக்கூடாது. ஆனால் அமெரிக்காவில் அரசியல் நிதி சேகரிப்பு உட்பட வேட்பாளர்கள் தாமாகவே பணம் செலவழிக்க வேண்டும். இதனால் பல முறைகேடுகள் நடைபெற வாய்ப்புண்டு.

சீனாவில் தேசிய மக்கள் காங்கிரஸ் பிரதிநிதிகள் மீதான கண்காணிப்பைப் பொறுத்தவரையில் கடுமையான தாக்கமான கண்காணிப்பு இருக்கும். சட்டம் அவர்களுக்கான உரிமைகளை உத்தரவாதப் படுத்துகின்ற அதேவேளையில், தேவையேற்படின் அவர்களை நீக்குவதற்கான சரத்துகளையும் கொண்டிருக்கும். ஆனால் அமெரிக்காவில் ஒருவர் பிரதிநிதியாக ஒருகால் தெரிவு செய்யப்பட்டால், அவரை மக்கள் கண்காணிப்பதற்கான சட்ட ரீதியான எந்தப் பொறிமுறைகளும் இல்லை. அவர் தனது பதவிக்காலம் வரை எந்த இடையூறுகளும் இன்றிப் பதவியில் தொடர்வார்.

அமெரிக்காவின் ஹாவார்ட் பல்கலைக்கழகத்தை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்ட ஓர் ஆய்வின் அறிக்கையின்படி, கடந்த 13 வருட கால சீன அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மீது சீன மக்களில் 93 வீதமானோர் திருப்தி வெளியிட்டுள்ளனர். ஆனால் 2020ஆம் ஆண்டு அமெரிக்க அரச புள்ளி விபரங்களின்படி, அமெரிக்காவில் 65.1 வீத மக்களே அரசின் நடவடிக்கைகளை ஆதரித்துள்ளனர்.

இந்த புள்ளி விபரங்களின் அடிப்படையில் பார்க்கையில், அமெரிக்காவின் முதலாளித்துவ ஜனநாயக முறையை விட, சீனாவின் சோசலிச ஜனநாயக முறை சிறப்பானது என்பது தெளிவாகின்றது.

# கியூபா மீதான வெறுப்பைத் தூக்கி எறியுங்கள்



**Patric Leahy**

இதுவரையில் கியூபா மீது கடைப்பிடிக்கப்பட்ட வெறுப்பு உமிழும் கொள்கையைத் தூக்கி எறியுங்கள் என்று அமெரிக்க நாடாளு மன்ற உறுப்பினர்களாக பட்ரிக் லீஹி (Patric Leahy) மற்றும் ரொன் வைடன் (Ron Wyden) ஆகிய இருவரும் வலியுறுத்தியுள்ளனர். கியூபப் புரட்சி நடைபெற்றதிலிருந்து அங்கு அமைக்கப்பட்டுள்ள சோசலிச அரசைக் கவிழ்க்க அமெரிக்க அரசு முயற்சித்து வருகிறது. அத்தோடு, ஏராளமான தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. தடையை மீறி கியூபாவுடன் உறவு வைத்துக் கொள்ள முயலும் நாடுகளையும் அமெரிக்க தண்டிக்கிறது. தடைகளுக்கு எதிராகத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட போதும் தனது செயல்பாடுகளை அமெரிக்கா நிறுத்திக் கொள்ளவில்லை. அமெரிக்க மக்கள் மத்தியிலும் அரசின் கொள்கைகளுக்கு எதிரான கருத்து நிலவி வருகிறது.




**Ron Wyden**

இந்நிலையில்தான் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஜனநாயகக் கட்சியின் தலைவர்களுமான பட்ரிக் லீஹி மற்றும் ரொன் வைடன்

**தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க...**

# இலங்கையில் அரிசி மாபியாக்கள் எவ்வாறு உருவாகின்றனர்?




இலங்கையில் வாழ்கின்ற மக்களில் 90 சத விகிதத்துக்கும் அதிகமானோர் அரிசியையும், அரிசியை அடிப்படையாகக் கொண்ட உணவுப் பொருட்களையுமே தமது நாளாந்த உணவாக உட் கொள்கின்றனர். ஆனால் இப்பொழுது ஏனைய பொருளாதார நெருக்கடிகளுடன் அரிசித் தட்டுப்பாடும் விலையுயர்வும் நாட்டில் ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் மக்களுக்கு நியாயமான விலையில் அரிசி கிடைப்பதை உத்தரவாதம் செய்வதற்காக அரிசிக்கு உத்தரவாத விலையை நிர்ணயித்து செப்ரெம்பர் 28 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டது. ஆனால், அரிசி ஆலை முதலாளிகள் அரிசி உற்பத்தியை நிறுத்தியதுடன், அரிசி வர்த்தகர்கள் தமது அரிசிக் கையிருப்புகளைப் பதுக்கிவிட்டு, கள்ள மார்க்கட்டில் அரசாங்கம் நிர்ணயித்த விலையை விட ஒன்றரை மடங்கு அதிக விலைக்கு அரிசியை விற்கத் தொடங்கினர். இதனால் பொதுமக்கள் அரிசியைப் பெற முடியாமல் திண்டாடியதுடன், வாங்க முடிந்தவர்களும் அதிக விலை கொடுக்க வேண்டி ஏற்பட்டது. இதனால் அரசாங்கம் விலை நிர்ணயம் செய்து வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலை திரும்பப் பெற வேண்டிய நிலை ஏற்பட்டது.

இது ஒரு உண்மையை எடுத்துக் காட்டுகிறது. அதாவது, ஒரு அரசாங்கம் எவ்வளவுதான் மக்கள் ஆதரவைப் பெற்றிருந்தாலும், கொள்ளைக்கார வர்த்தகர்கள் நினைத்தால் மக்களை அரசாங்கத்துக்கு எதிராகத் திருப்பிவிட முடியும் என்பதே அந்த உண்மை. இது ஒரு முதலாளித்துவ சமூக அமைப்பில் உண்மையான அதிகாரம் யார் கைகளில் இருக்கிறது என்ற அடிப்படை உண்மையையும் எடுத்துக் காட்டுகிறது.

இலங்கையின் சனத் தொகையில் சுமார் 65 சத வீதமானோர் விவசாயத்தையே தமது பிரதான தொழிலாகக் கொண்டுள்ளனர். இலங்கை விவசாயிகள் வருடத்தில் கால போகம், சிறுபோகம் என இரண்டு போகங்கள் (மாவலி தண்ணீர் பெறும் சில பகுதிகளில் விவசாயிகள் மூன்று போகங்கள் செய்வதுமுண்டு) நெல் பயிரிடுகின்றனர். காலபோகத்தில் 9 இலட்சம் ஹெக்டயரும், சிறுபோகத்தில் 5 இலட்சம் ஹெக்டயருமாக மொத்தம் 14 இலட்சம் ஹெக்டயரில் நெல் செய்கை பண்ணப்படுகிறது. சராசரியாக ஒரு ஹெக்டயரில் 4,500 கிலோ நெல் விளைவிக்கப்படுகிறது.

*சதானந்தன்*

முன்பு இலங்கை, சீனா, இந்தியா, பர்மா, தாய்லாந்து வியட்நாம், பாகிஸ்தான், யப்பான், கொரியா போன்ற நாடுகளில் இருந்து பெருமளவு அரிசியை இறக்குமதி செய்து வந்தது. (1952 இல் சீனாவுடன் செய்து கொள்ளப்பட்ட அரிசி – இறப்பர் ஒப்பந்தம் சுமார் 25 ஆண்டு காலம் நீடித்திருந்தது)) காரணம், அப்பொழுது அதிக விளைச்சலைக் கொடுக்கும் நெல் ரகங்கள் இலங்கையில் இருக்கவில்லை. அத்துடன் உற்பத்தி முறைகளும் முன்னேற்றகரமாக இருக்கவில்லை. அதனால் உற்பத்தி செய்யப்படும் அரிசி நாட்டின் முழுச் சனத்தொகைக்கும் போதாமல் இருந்தது. ஆனால் நெல் ரகங்களிலும், உற்பத்தியிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டதால் உற்பத்தி அதிகரித்தது. 2015 இல் இலங்கை அரிசியில் தன்னிறைவு அடைந்து விட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

இலங்கையில் தற்பொழுது ஏற்பட்டுள்ள அரிசித் தட்டுப்பாடும், விலையுயர்வும் உண்மையில் உற்பத்தி குறைந்ததால் ஏற்பட்டதல்ல. இது அரிசி வர்த்தகர்களின் திட்டமிட்ட நடவடிக்கைகளாலும் அரசாங்கத்தின் முன் யோசனையற்ற திட்டமிடாத நடவடிக்கைகளாலும் ஏற்பட்ட ஒன்றாகும். உண்மையில், அரிசி வர்த்தகர்களின் கொள்ளைக்கார நடவடிக்கையை அரசாங்கம் எதிர்பார்த்து உரிய நடவடிக்கைகளை நேரத்தோடேயே எடுத்திருக்க வேண்டும்.

இலங்கையில் அரிசி மாபியாக்களின் நடவடிக்கைகள் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. அது பல ஆண்டு கால வரலாறு கொண்டது. அவர்களுடைய பதுக்கல் மற்றும் விலையேற்ற நடவடிக்கைகளைத் தடுப்பதற்கும், விவசாயிகளுக்கு அவர்களுடைய உற்பத்திக்கு நியாயமான விலை கிடைப்பதற்காகவும்தான் 50 ஆண்டுகளுக்கு முன்னர் 1971 இல் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அப்போதைய ஐக்கிய முன்னணி அரசாங்கம் நெல் சந்தைப் படுத்தும் சபையொன்றை (Paddy Marketing Board) உருவாக்கி அதன் கிளைகளை நாடு முழுவதும் திறந்து வைத்தது.

இருந்தும், உண்மையில் என்ன நடக்கிறது என்றால், விவசாயிகள் தமது உற்பத்திச் செலவுகளை ஈடு செய்வதற்காகவும், வாழ்க்கைக் கஸ்டம் காரணமாகவும் தாம் உற்பத்தி செய்யும் நெல் முழுவதையும் உடனேயே விற்பனை செய்து விடுவார்கள். அடுத்த போக நெல் விதைப்பின் போது அவர்களிடம் விதை நெல், பசளை, கிருமிநாசினி போன்றவற்றை வாங்கவோ, வயலை உழுவதற்கோ, வேலையாட்களுக்குச் கூலி

கொடுக்கவோ பணம் இருக்காது.

இந்த நேரத்தில் நெல் வர்த்தகர்களும், அரிசி ஆலை முதலாளிகளும் விவசாயிகளை அணுகி அவர்களது வயல் செய்கைக்கு முற்பணம் வழங்குவார்கள். அப்படிக் கொடுக்கும் போது ஒரு நிபந்தனை விதிப்பார்கள். அதாவது, அவர்களது வயலில் விளையும் நெல் முழுவதையும் தமக்குத்தான் விற்க வேண்டும் என்பதே அந்த நிபந்தனை. அந்த நிபந்தனையின் அடிப்படையில் விவசாயிகளின் நெல் முழுவதையும் மிகவும் குறைந்த அடிமாட்டு விலைக்கு வாங்கி விடுவார்கள். அப்படி வாங்கிய நெல்லை அரிசியாக்கி பின்னர் இரண்டு மூன்று மடங்கு விலைக்கு அதே விவசாயிகளுக்கும் பொது மக்களுக்கும் விற்பனை செய்து பெரும் இலாபம் ஈட்டுவார்கள்.

இந்த நிலைமையைத் தடுப்பதற்காகவே அப்போதைய அரசாங்கம் நெல் சந்தைப்படுத்தும் சபையை உருவாக்கியது. ஆனால் அது உரிய பலனை இன்றுவரை அளிக்கவில்லை. நெல் வியாபாரிகள், சந்தைப்படுத்தும் சபை அதிகாரிகள் என இருதரப்பினரும் அதற்கான காரணகர்த்தாக்கள்.

உதாரணமாக, நெல் வியாபாரிகள் விவசாயிகளிடமிருந்து ஒரு கிலோ நெல்லை 50 ரூபாவுக்கு வாங்குகிறார்கள் என வைத்துக் கொள்வோம். நெல் சந்தைப்படுத்தும் சபை ஒரு கிலோ நெல்லை வாங்கும் விலையாக 70 ரூபாவை அறிவிக்கும். இந்த நேரத்தில் விவசாயிகள் தமது நெல்லை சந்தைப்படுத்தும் சபைக்கு விற்பதற்கே விரும்புவார்கள். அதைத் தடுப்பதற்காக தனிப்பட்ட நெல் வியாபாரிகள் ஒரு கிலோ நெல்லை சந்தைப்படுத்தும் சபையின் விலையை விட 10 ரூபா கூட்டி 80 ரூபாவுக்கு வாங்கத் தொடங்குவார்கள். அதனால் விவசாயிகள் தமது நெல்லை தனிப்பட்ட வியாபாரிகளுக்கே விற்பார்கள். முழு நெல்லும் அவர்களுக்கே போய்ச் சேரும். சந்தைப்படுத்தும் சபைகளுக்கு நெல் செல்லாது அதன் களஞ்சியங்கள் காலியாக இருக்கும்.

இதில் இன்னொரு பிரச்சினையும் இருக்கிறது. அதாவது, தனிப்பட்ட நெல் வியாபாரிகள் சந்தைப்படுத்தும் சபை அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுத்து அவர்களைத் தமது கைக்குள் வைத்துக் கொள்வார்கள். அவர்கள் தனிப்பட்ட நெல் வியாபாரிகள் லாபம் பெறும் வகையில் சில நடவடிக்கைகள் எடுப்பார்கள். அந்த நடவடிக்கைகள் பல விதமாக இருக்கும். அவையாவன:

விவசாயிகள் சந்தைப்படுத்தும் சபை அதிகாரிகளுக்கு முதலில் தமது நெல்லின் மாதிரியைக் (சாம்பிள்) கொண்டு போய்க் காட்ட வேண்டும். அந்த நெல் போதியளவு உலர வைக்கப்படவில்லை அல்லது கூடுதலான சப்பட்டை கலந்திருக்கிறது எனச் சொல்லி நெல்லை கொள்வனவு செய்யாமல் நிராகரித்து விடுவார்கள். சில வேளைகளில் விவசாயிகள் சபைக்கு நெல் கொண்டு வருவதற்கு சாக்கு பைகளை நேர காலத்துக்கு வழங்காமல் இழுத்தடிப்பார்கள். நெல் சேமித்து வைக்கும் களஞ்சியங்களில் இட வசதி இல்லை என சாக்குப் போக்குச் சொல்லிக் கடத்துவார்கள். வாங்குகிற நெல்லுக்கு உரிய காலத்தில் பணம் கொடுக்காமல் இழுத்தடிப்பார்கள். இவையெல்லாவற்றையும் மீறி நெல் வாங்குவதானால் சபையின் கிளை முகாமையாளர்களுக்கு விவசாயிகள் இலஞ்சம் கொடுக்க வேண்டியும் இருக்கும்.

இப்படி நெல் வியாபாரிகளிடமும், நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளிடமும் இலஞ்சம் வாங்கியே பணக்காரர்கள் ஆன சபையின் பல முகாமையாளர்கள் இருக்கிறார்கள்.

இத்தகைய காரணங்களால் இலங்கையில் அரிசி வியாபாரம் என்பது தனிப்பட்ட வர்த்தகர்களின் கைகளில் ஏகபோகமாக இருக்கிறது. அதன் காரணமாக அவர்கள் வைக்கும் விலையே சட்டம் என்ற நிலை. இந்த நிலைமையை மாற்றி அமைப்பதானால் அரசாங்கம் புதிய வழி முறைகளைக் கண்டறிந்து, நெல் கொள்வனவின் பெரும் பகுதியைத் தானே தனது கைகளில் எடுத்து, அதன் மூலம் நியாயமான விலைக்கு பொது மக்களுக்கு அரிசியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இது ஒன்றே இருக்கின்ற ஒரே வழி.

அரசாங்கம் இந்த விடயத்தில் பாராமுகமாக அசிரத்தையாக இருந்தால், அரிசி வியாபாரம் என்பது பரிணாம வளர்ச்சி அடைந்து, 'அரசியல் வியாபாரமாக'வும் போய் முடியலாம்.

**6ம் பக்கத்தொடர்ச்சி...**

வரையிலான மக்கள் இதுவரை கொல்லப்பட்டுள்ளதுடன், அதன் தாக்கத்தால் மேலும் 20 மில்லியன் மக்கள் மிகவும் மோசமான வறுமைக்குள் தள்ளப்பட்டிருப்பதாகவும் ஐ.நா. அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

அந்த அறிக்கையின்படி, உலக ரீதியாக சுகாதார நடைமுறைகள் சீர்குலைந்துள்ளதால், எய்ட்ஸ் (Aids), மலேரியா போன்ற நோய்களுக்கான பரிசோதனைகள் 43 வீதம் வீழ்ச்சி அடைந்துள்ளதுடன், 2021இல் 23 மில்லியன் சிறுவர் தமது சிறு பாராயத்துக்கான தடுப்பூசிகள் ஏற்றப்படுவதையும் இழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், சுற்றுச்சூழல் பாதிப்பால் அழிவுகளும் அடிக்கடி ஏற்படுகின்றன. புவி வெப்பமடைவதால் 2050இல் 216 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தமது சொந்த நாடுகளுக்குள் இடம் பெயர வேண்டிய நிலையும் ஏற்படலாம் என ஐ.நா. எச்சரித்துள்ளது. அத்துடன், சுற்றுச்சூழல் பாதிப்பு காரணமாக பட்டினி, உணவுப் பாதுகாப்பின்மை என்பன அதிகரிப்பதுடன், அதனால் 43 நாடுகளைச் சேர்ந்த 45 மில்லியன் மக்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுவார்கள் எனவும் ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல நாடுகளில் ஏற்பட்டுள்ள மோதல் போக்குகளாலும் நிலைமை மோசமடைந்துள்ளது. குறிப்பாக, ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றியதைத் தொடர்ந்து, அந்த நாட்டுக்கான வெளிநாட்டு உதவிகள் நிறுத்தப்பட்டுள்ளதால், அந்த நாடு பல்வேறு பெரும் நெருக்கடிகளுக்குள் ஆழ்ந்துள்ளது. "இந்த நிலைமைகளுக்கு பொருத்தமான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளாவிடின் பேரழிவு ஏற்படுவது நிச்சயம்" என ஐ.நா. உலக நாடுகளை எச்சரித்துள்ளது.

கொவிட் தொற்றால் ஏற்பட்டுள்ள பொருளாதார அழுத்தங்களின் மத்தியிலும், இதுவரையில் இந்த ஆண்டில் 17 பில்லியன் டொலர் நிதியுதவி வழங்கியமைக்காக சர்வதேச தொண்டு நிறுவனங்களுக்கும் அங்கத்துவ நாடுகளுக்கும் கிறிஃப்பித்ஸ் நன்றி தெரிவித்தார்.

# ஹொண்டுரசில் சர்வாதிகாரத்துக்கு சாவு மணி!




**President Xiomara Castro de Zelaya**

**தெ**ன் அமெரிக்க நாடான ஹொண்டுரசில் (Honduras) நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரம் மற்றும் மீள் அத்திபாரத்துக்கான கட்சியின் வேட்பாளர் சியோமாரா கஸ்ட்ரோ டி ஸெலயா (Xiomara Castro de Zelaya) வெற்றி பெற்றுள்ளார். செலுத்தப்பட்ட வாக்குகளில் சுமார் 54 சத வீத வாக்குகளைப் பெற்று பதவியில் இருந்த தேசியவாத கட்சியின் அமெரிக்க சார்பு சர்வாதிகார ஜனாதிபதி ஜுவான் ஓர்லான்டோ ஹெர்னன்டெஸ்சை (Juan Orlando Hernandez) தோற்கடித்துள்ளார். சியோமாரா 2009இல் அமெரிக்க உதவியுடன் சதி மூலம் கவிழ்க்கப்பட்ட ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்டு ஜனாதிபதியாக இருந்த மனுவல் “மெல்” ஸெலயாவின் (Manuel “Mel” Zelaya) துணைவியாராவார்.

அவரின் வெற்றி கொண்டுராஸ் மக்களைப் பொறுத்தவரை அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும், அது ஆதரித்த ஹொண்டுரஸ் இராணுவ சர்வாதிகாரிகளுக்கும் எதிரான மாபெரும் வெற்றியாகும்.

முன்னைய சர்வாதிகாரி ஜுவான் ஓர்லான்டோவின் ஆட்சி அமெரிக்காவினால் பயிற்சி அளிக்கப்பட்ட இராணுவப் பொலிசையும், வலதுசாரித் துணைப்படைகளையும் கொண்டு ஹொண்டுரஸ் மக்களின் மீது கொடிய அடக்குமுறை ஆட்சியை நடத்தி வந்தது. அவர்கள் பெண்கள், பின் தங்கிய மக்கள், கல்வியாளர்கள், தொழிற்சங்க உறுப்பினர்கள், சுற்றுச்சூழலியலாளர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், பழங்குடி மக்கள், ஆபிரிக்க வம்சாவழியினர், ஓரின பால்சேர்க்கையாளர்கள், திருநங்கையர்களென ஆயிரக்கணக்கான மக்களைக் கொலை செய்ததுடன், பல்லாயிரக்கணக்கானோரைச் சிறைகளில் அடைத்து வைத்து சித்திரவதையும் செய்தனர்.

அமெரிக்காவினால் 2009இல் சதி மூலம் பதவிக்கு கொண்டு வரப்பட்ட ஜுவானின் சர்வாதிகார ஆட்சி கண்துடைப்புக்காக 2013இல் ஒரு தேர்தலை நடத்தி மோசடி மூலம் மீண்டும் ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டது. 2017இல் மீண்டும் ஒரு தேர்தல் நாடகத்தை ஆடியது. அப்பொழுது தேர்தலில் போட்டியிட்ட எதிரணி வேட்பாளர்கள், தேர்தல் ஊழியர்கள் உட்பட 30 பேரைப் படுகொலை செய்தது. தற்போதைய தேர்தலிலும் அவ்வாறான நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் எடுத்த போதும், மக்கள் அச்சமின்றி முன் வந்து சர்வாதிகார ஆட்சியைத் தோற்கடித்தனர். “அவர்கள் எமக்குப் பயப்படுகிறார்கள். ஏனெனில், நாம் பயப்படாமல் இருப்பதால்” என்பதே தற்போது நடந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்களின் சுலோகமாக இருந்தது.

ஜுவானின் ஆட்சியின் கீழ் தென் அமெரிக்காவிலேயே ஹொண்டுரஸ் மக்கள்தான் மிகவும் வறிய மக்களாகவும், வருமானத்தில் மிகவும் ஏற்றத்தாழ்வான நிலையிலும் இருந்தவர்கள் ஆவர். சனத்தொகையில் சுமார் 74 சத வீதத்தினர் வறுமையில் உழன்றனர். சர்வதேச மதிப்பீடுகளின்படி, அவர்களிலும் 40 வீதத்தினர் மிகக் கடுமையான வறுமையில் மூழ்கி இருந்தனர். நாட்டின் 10.1 மில்லியன் மக்களில் சுமார் 1.3 மில்லியன் மக்கள் உணவுப் பாதுகாப்பின்மை காரணமாக அல்லல் பட்டதுடன், பொதுவாக மக்கள் எல்லோரும் கொவிட் தொற்று மற்றும் இருமுறை வீசிய ‘ஹரிக்கேன்’ சூறாவளி என்பனவற்றால் பெரிதும் பாதிகப்பட்டிருந்தனர்.

தொழிற்சங்கங்கள் அடக்கப்பட்டிருந்ததுடன், தொழிலாளர் உரிமைகள் மறுக்கப்பட்டிருந்தன. நாட்டில் நிரந்தரமாக ஒரு வேலையைப் பெறுவதென்பது முயல் கொம்பாக இருந்தது.

இதில் இன்னொரு வேடிக்கை என்னவெனில், ஜுவானின் அமெரிக்க சார்பு சர்வாதிகார ஆட்சி தன்னை ஒரு “ஜனநாயக சோசலிச” அரசாக அழைத்துக் கொண்டதுதான். ஆனால் அவனுடைய அரசை பெரும் பணக்கார பரம்பரைக் குடும்பங்களான அற்லா ஸப்லா (Atala Zablah) மற்றும் ஃபக்கியுசி (Facusse’) குடும்பங்கள்தான் ஆதரித்து வந்தன.

ஹொண்டுரசின் வரலாற்றில் முதல் தடவையாக தெரிவு செய்யப்பட்டுள்ள பெண் ஜனாதிபதியான சியோமாரா முன்னைய ஆட்சியின் கொடூரமான சட்டங்களும் நடைமுறைகளும் மாற்றியமைக்கப்படும் என மக்களுக்கு வாக்குறுதி அளித்துள்ளார். மக்களுக்கு நன்மை பயக்கும் வைத்திய வசதிகள், உணவு, வீடு, வேலை வாய்ப்பு என்பன உத்தரவாதப்படுத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளார். பெருமளவிலான ஹொண்டுரஸ் மக்கள் அமெரிக்காவுக்குள் குடிபெயர்ந்ததிற்குக் காரணம் ஹொண்டுரசில் வேலை வாய்ப்புகள் அருகிப் போனமைதான் எனவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஜுவானின் சர்வாதிகார ஆட்சியின் கீழ் அவனுடைய நெருங்கிய உறிவினர்களும், இராணுவ உத்தியோகத்தர்களும் ஊழல்கார அதிகாரிகளும் மக்கள் மீது அடக்குமுறையைச் செலுத்தியது மட்டுமல்லாமல், நாட்டின் வளங்களைக் கொள்ளையடித்து பெரும் செல்வந்தர்களாக மாறியுள்ளனர். போதை வஸ்து கடத்தல்காரர்கள் தாம் விரும்பியவாறு எவ்வித அச்சமும் இன்றி வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர். மிகப் பெரிய போதை வஸ்து வியாபாரியான ஜனாதிபதி ஜுவானின் சகோதரன் ரொனி ஹெர்னன்டெஸ் (Tony Hernandez) போதை வஸ்து கடத்தல் குற்றச்சாட்டில் அமெரிக்காவுக்கு நாடு

கடத்தப்பட்டு ஆயுள் தண்டனை அனுபவித்து வருகின்றான்.

சர்வாதிகாரத் தன்மையும், ஊழல் தனமும் நிறைந்த தற்போதைய அரசியலமைப்பு மாற்றப்பட்டு, ஜனநாயகத் தன்மை வாய்ந்த புதிய அரசியல் அமைப்பொன்று அறிமுகப்படுத்தப்படும் என புதிதாகத் தெரிவாகியுள்ள ஜனாதிபதி சியோமாரா அறிவித்திருக்கிறார். அத்துடன், பெண்கள், ஓரின செய்கையாளர்கள், திருநங்கையர் ஆகியோரின் உரிமைகளும் உத்தரவாதப்படுத்தப்படும் எனவும் அவர் அறிவித்திருக்கிறார்.

ஹொண்டுரசின் பிரசித்தி பெற்ற அமைப்புகள் மக்களுக்கான அதிகாரத்தை வலியுறுத்தி உள்ளன. கொண்டுராசின் பிரசித்தியான மற்றும் பழங்குடி இன மக்களின் குடியியல் (சிவில்) சபை (COPINH) பின்வருமாறு கூறியிருக்கிறது:

“சமூக அமைப்புகளுக்கும் பிரக்ஞையுள்ள மக்களுக்கும் அடிப்படையான மாற்றங்கள் ஏற்படும் வரை போராட்டத்தைத் தொடர வேண்டும் என்பதை நினைவு படுத்த விரும்புகிறோம். பெரும்பான்மையான மக்களுக்கு அதிகாரங்கள் கிடைக்கும் வகையில் உரையாடல்களைத் தொடர வேண்டும்.”

2016இல் பிரசித்தியான மற்றும் பழங்குடி இன மக்களின் குடியியல் சபையின் தலைவி பேற்றா காஸிறெஸ் (Berta Caceres) படுகொலை செய்யப்பட்டார். அவரைப் பற்றி குறிப்பிட்ட சபை, “அவர் இறக்கவில்லை, அவர் பெருகி வாழ்கிறார்” எனக் கூறியுள்ளது.

கறுப்பு சகோதரத்துவ அமைப்பினைச் சேர்ந்த மிரியம் மிராண்டா (Miriam Miranda) “பொருளாதாரம், அரசியல், இராணுவம் என அனைத்து வகை அமைப்புகளும் சியோமாராவுக்கு எதிராக இருக்கையில் அவர் எவ்வாறு ஆட்சியை நடத்தப் போகிறார்?” எனக் கேள்வி எழுப்பியுள்ளார். மேலும் அவர்,

“யார் வெற்றி பெற்றாலும் சுற்றுச்சூழல் போன்ற அடிப்படை விடயங்களைப் பாதுகாக்க வேண்டியவர்களாக உள்ளோம். கோப்பரேட்டுகள் சுற்றுச் சூழலை அழித்துச் சூறையாடியுள்ளார்கள். எனவே, நீங்கள் ஒரு பக்கத்தில் விழிப்பாக இருப்பதுடன், மறுபக்கத்தில் அழிக்கப்பட்ட இயற்கையை புனர் நிர்மாணம் செய்வதில் கவனம் எடுக்க வேண்டும். இது உலகம் முழுவதும் நடைபெறும் ஒரு விவாதமாக இருக்கின்றது” எனத் தெரிவித்துள்ளார்.

புதிதாகத் தெரிவான ஹொண்டுரஸ் ஜனாதிபதி சியோமாரா நொவம்பர் 28இல் தனது வெற்றி உரையின் போது, “இந்த வெற்றியைக் ஹொண்டுரஸ் மக்கள் உணர்கிறார்கள் என்பதை எனது இதயத்தில் இருந்து தெரிவித்துக் கொள்கிறேன். இனிமேல் மேலும் யுத்தங்கள் இல்லை. மேலும் வெறுப்புகள் இல்லை. மரணப்படைகள் இனிமேல் இல்லை. ஊழல்கள் இல்லை, போதை வஸ்துக் கடத்தல்கள், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் இனிமேல் இல்லை. விசேட பொருளாதார அபிவிருத்தி வலயங்கள் இருக்காது. வறுமையும் துன்பமும் இனி இருக்காது. இறுதி வெற்றி வரை எமது மக்கள் ஐக்கியப்பட்டு முன் சென்று நாட்டை மாற்றி அமைக்க வேண்டும்!” எனக் கூறியுள்ளார்.

(2013இல் ஹொண்டுரசில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிக்கச் சென்ற சர்வதேச நடவடிக்கை நிலையத்தின் தூதுக்குழுவில் அங்கத்தவராகச் சென்ற மனித உரிமை அவதானியான Martha Grevatt என்பவர் எழுதிய கட்டுரையின் முக்கியமான பகுதிகளே மேலே தரப்பட்டுள்ளன)

# இலங்கையில் 243 பெண்கள் கொலை: 128 பேரின் மரணத்திற்கு கணவன்மாரே காரணம்

**இ**லங்கையில் கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற 243 பெண்களின் கொலைகளில், 128 பேரை அவர்களின் சட்டப்பூர்வமான கணவன்மாரே செய்திருக்கின்றார்கள்.

ஐக்கிய நாடுகள் சபையின் சனத்தொகை நிதியம் மேற்கொண்ட ஆய்வொன்றிலேயே இந்த விடயம் தெரியவந்துள்ளது. விபத்துகள், தற்கொலைகள் மற்றும் பெண்கள் என்ற காரணத்துக்காகக் கொலைசெய்யப்படுதல் ஆகிய விடயப்பரப்பின் தகவல்களைத் திரட்டும் நோக்கில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையில் இவ்வாறான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

இதன்படி குறித்தக் காலப்பகுதியில் இடம்பெற்ற இயற்கைக்கு மாறான 243 மரணங்களில், 62 சதவீதமானவை குறித்த பெண்களின் சட்டபூர்வ கணவர் அல்லது முன்னாள் கணவர் அல்லது குடும்ப உறுப்பினர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதேவேளை, இவ்வாறான சம்பவங்களில் 69 சதவீதமானவை பதிவு செய்யப்படவில்லை என்றும் தெரியவந்துள்ளது. இது ஆபத்தான விடயம் என்றும் ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**8ம் பக்கத்தொடர்ச்சி...**

ஆகிய இருவரும் கியூப எதிர்ப்புக் கொள்கைக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு கோரியிருக்கிறார்கள். செய்தியாளர்களைச் சந்தித்து தங்கள் கருத்துக்களை வெளிப்படையாகவே முன் வைத்துள்ளனர். அப்போது பேசிய பட்ரிக் லீஹி, “கடந்த 50 ஆண்டுகளாகவே அமெரிக்க–கியூப உறவைக் கவனித்து வருகிறேன். இரு நாடுகளுக்கும் இடையிலான நிலைமை குழப்பமாகவும், துயரம் நிறைந்ததாகவும், எரிச்சலூட்டுவதாகவும் அமைந்திருக்கிறது. தொடர்ந்து விதிக்கப்படும் தடைகளும், மிரட்டல்களும் எதிர்பார்த்த முடிவுகளைத் தரவில்லை. இரு தரப்பு உறவுகள் நல்ல முறையில் இருப்பதையே மக்கள் விரும்புகிறார்கள். சிறுபான்மையினர்தான் பைடன் நிர்வாகம் திணித்துள்ள கொள்கையை ஆதரிக்கிறார்கள்” என்றார். 1974 ஆம் ஆண்டு முதல் வெர்மொன்ட் (Vermont) மாநிலத்திலிருந்து செனட் அவைக்குத் தொடர்ந்து எட்டு முறை ஜனநாயகக் கட்சி சார்பில் தேர்வு செய்யப்பட்டவர் பட்ரிக் லீஹி என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பயங்கரவாத ஆதரவு நாடுகள் பட்டியலில் கியூபாவை அமெரிக்கா வைத்திருக்கிறது. வாஷிங்டனின் இதுபோன்ற நடவடிக்கைகள் முரண்பாடாக இருக்கின்றன என்று சுட்டிக்காட்டும் பட்ரிக் லீஹி, இத்தகைய அம்சங்கள் மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். இது போன்ற தோற்றுப்போன உத்திகளைக் கைவிட்டு விட்டு, சொந்த நாட்டின் நலன்கள் சார்ந்த பணிகளில் ஜோ பைடன் கவனம் செலுத்தலாம் என்று கூறியுள்ளார்.

# விசிலூதிகளுக்கு என்ன பாதுகாப்பு?




ஜூலியன் அசாஞ்சே கொஞ்சம் கொஞ்சமாக செத்துக்கொண்டிருக்கிறார் என்று அவருடைய வழக்குரைஞர் தெரிவித்திருப்பதும், அவருடைய உடல் நலம் குன்றிக்கொண்டேவருவதும் ஜனநாயகத்துக்காக இப்படிச் செயலாற்றும் விசிலூதிகளின் பாதுகாப்பு தொடர்பாக தீவிரமான கேள்விகளை எழுப்புகிறது. கூடவே நவீன சமூகத்தின் நாகரிக எல்லைகளின் போதாமையையும் அது சுட்டிக்காட்டுகிறது.

இங்கிலாந்தில் உள்ள உயர் பாதுகாப்புச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் அசாஞ்சே தன்னுடைய 'விக்கிலீக்ஸ்' இணையதளத்தின் வழி பல நாடுகளின் மோசமான அரசியலாட்டங்களை அம்பலப்படுத்தியவர். அசாஞ்சே அம்பலப்படுத்திய விவகாரங்கள் அந்தக் காலகட்டத்தில் உலகெங்கும் பெரும் நாயகப் பிம்பத்தை அவருக்கு உருவாக்கின. வெகுசீக்கிரம் சர்வதேச முற்றுகையின் கீழ் கொண்டுவரப்பட்ட அவர், இப்போது பிரித்தானியா சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். தன்னை அமெரிக்கா வசம் ஒப்படைத்துவிடக் கூடாது, அது தன் உயிருக்கு ஆபத்து என்று கோரி நீதிப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார் அசாஞ்சே.

இலண்டன் உயர் நீதிமன்றம் இந்த வழக்கை விசாரித்துவந்தது. அமெரிக்க அரசிடம் அசாஞ்சேவை ஒப்படைத்துவிடலாம் என்று 09.12.2021 அன்று அது தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்புக்கு எதிராக பிரிட்டன் உச்ச நீதிமன்றத்தில் முறையிட அசாஞ்சேவின் வழக்கறிஞர்கள் தயாராகிவருகின்றனர். இதனிடையே கடுமையான உடல் ~ மன நலப் பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார் அசாஞ்சே. மேல்முறையீட்டில் ஒருவேளை தோற்று, அமெரிக்காவுக்கு அசாஞ்சே அனுப்பப்பட்டால், அமெரிக்க சட்ட நடைமுறைகளின்படி 175 ஆண்டுகள் வரை அவர் சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடலாம். முதல் உலகப்போர் காலச் சட்டத்தை ஏவி சதிகாரர் என்று அசாஞ்சே மீது குற்றஞ்சாட்டுகிறது அமெரிக்கா.

ஐம்பது வயதாகும் அசாஞ்சேவை அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தால் அங்குள்ள சிறைக்கூட நிலைமை காரணமாக அவர் தற்கொலை செய்துகொண்டுவிடுவார் மோசமான நிலையில் அவர் இருக்கிறார் என்று அவருடைய சார்பில் வாதிட்டதை முன்னதாக பிரிட்டனின் கீழமை நீதிமன்றம் ஏற்றது. ஆனால், உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு வந்தபோது அமெரிக்க அரசு சார்பில் அளிக்கப்பட்ட உறுதிமொழியை அது ஏற்றது. அசாஞ்சேவை தனிமைச் சிறையிலோ, கொலராடோவில் உள்ள சூப்பர்மேக்ஸ் சிறையிலோ அடைக்க மாட்டோம் என்று அமெரிக்க அரசு உறுதியளித்தது. வழக்கு விசாரணைக்குப் பிறகு தண்டனையை அவர் ஆஸ்திரேலிய சிறைகளில்கூட அனுபவிக்கட்டும் என்றும் அமெரிக்க அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது. இதன் விளைவாக அமெரிக்கத் தரப்பை ஏற்றுக்கொண்டது நீதிமன்றம்.

*சமஸ்*

அவுஸ்திரேலியாவில் பிறந்தவரான அசாஞ்சே இலண்டனில் உள்ள ஈக்குவடோர் நாட்டு தூதரகத்தில் 2012 இல் தஞ்சம் புகுந்தார். அரசு இரகசியங்களை வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டின்பேரில் முதலில் அவரை ஸ்வீடனிலும் பிறகு அமெரிக்காவிலும் விசாரிக்க முற்பட்டனர். பின்னர், சுவீடன் அரசு தனது வழக்கைக் கைவிட்டுவிட்டது. அமெரிக்க அரசு துரத்திவருகிறது.

கேள்வி என்னவென்றால், ஜனநாயக விழுமியங்களுக்கும், அரசமைப்புச் சட்டங்களுக்கும்கூட அப்பாற்பட்டு அரசு எனும் அமைப்பை மோசமாகக் கையாளும் ஆட்சியாளர்களை அம்பலப்படுத்தும் விசிலூதிகளுக்கு நாம் என்ன வகையான சட்டபூர்வப் பாதுகாப்பை உருவாக்கியிருக்கிறோம்? 'அரச ரகசியம்' என்ற சொல்லாடலின் கீழ் எதையெல்லாம் மக்கள் பார்வையிலிருந்து மறைத்துவைக்க முடியும்? காலனிய கால அணுகுமுறையின் நீட்சியாகவும் கடந்துவந்த நூற்றாண்டுகளின் பார்வையையும் இன்னும் எவ்வளவு காலத்துக்குத் தூக்கிச் சுமக்கப்போகிறோம்?

அமெரிக்க வெளியுறவுத் துறை அலுவலகம் மற்றவர்களுடன் வைத்திருந்த தொடர்பு, மின்னஞ்சல் தொடர்பு அனைத்தையும் அசாஞ்சே பொதுவெளியில் வெளியிட்டார். பாக்தாத்தில் அமெரிக்கா நடத்திய வான் தாக்குதல், ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த ஒருவரைக் கொல்வதில் முடிந்தது உள்பட பல தகவல்கள் அவர் வெளியிட்ட ஆவணங்களில இருந்தன. இவற்றில் பல விஷயங்கள் ஆட்சியாளர்களின் அத்துமீறல்களையே வெளிக்கொணர்ந்தன.

அசாஞ்சேவின் ஆதரவாளர்கள் ~ அவரைத் திருமணம் செய்துகொள்ளப்போகும் ஸ்டெல்லா மோரிஸ் உள்பட, 'இலண்டன் நீதிபதிகளின் அனுமதியானது, இரகசியம் என்று அரசுகளால் அறிவிக்கப்படும் கோப்புகளிலிருந்து தகவல்களைப் பெற்று வெளியிடும் பத்திரிகையாளர்களின் முயற்சிகளுக்குப் பெரிய தடையாக அமைந்துவிடும்' என்று எச்சரிப்பதானது மிக முக்கியமானது.

'இந்த நீண்ட சட்டப் போராட்டம் நீடித்தால் அது அவர் ஆயுளைப் பாதிக்கும் எனும் எங்கள் அச்சம் இப்போது மேலும் அதிகரிக்கிறது... இது சீக்கிரம் தீர்க்கப்பட வேண்டும். மிருகக்காட்சிசாலையில் கூண்டுகளில் அடைக்கப்பட்டிருக்கும் விலங்குகளைப் பாருங்கள். அது அவற்றின்

**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...**

# எழுத்தாளர் செ.கணேசலிங்கன் மறைவு குறித்து 'இந்து'



முதுபெரும் மார்க்சியவாதியும் தமிழ் எழுத்தாளருமான செ.கணேசலிங்கன் 93 வயதில் சனிக்கிழமை (டிசம்பர் 4) சென்னையிலுள்ள தனது மகளின் இல்லத்தில் காலமனார். அவருக்கு ஒரு மகனும், இரு மகள்களும் இருக்கின்றனர். மகன் குமரனும், மகள் மலர்விழி சிதம்பரநாதனும் வெளியீட்டுத்துறையில் ஈடுபட்டுள்ளனர்.

கணேசலிங்கன் இலங்கையின் வட மாகாணத்திலுள்ள உரும்பிராய் கிராமத்தில் 1928 மார்ச் 9இல் பிறந்தார். கணேசலிங்கன் படிப்பு முடிந்ததும் அரசாங்க சேவையில் இணைந்து கொண்டார். 1950 – 1981 இடைப்பட்ட காலத்தில் திரிகோணமலை மற்றும் கொழும்பு போன்ற இடங்களில் சேவையாற்றிய பின்னர் திறைசேரி உத்தியோகத்தில் இருந்து ஓய்வு பெற்றார்.

அவர் தனது மாணவப் பருவத்திலேயே எழுத்துத் துறையில் ஆர்வம் கொள்ளத் தொடங்கிவிட்டார். அவரது முதலாவது சிறுகதை 1950 ஆம் ஆண்டு வெளியானது. அதன் பின்னர் எட்டு வருடங்கள் கழித்து அவரது சிறுகதைத் தொகுதி ஒன்று வெளியிடப்பட்டது. அந்தத் தொகுதிக்கு தமிழ் கல்வித்துறையினரால் நன்கு அறியப்பட்ட 'முவ' என அழைக்கப்படும் மு.வரதராசன் முன்னுரை எழுதியிருந்தார். 1965 இல் வெளிடப்பட்ட அவரது முதல் நாவலான 'நீண்ட பயணம்' சாதிப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதாகும். இந்த நாவலுக்கு இலங்கை அரசின் 'சாகித்திய மண்டல' பரிசு கிடைத்தது. அவர் 71 நாவல்களும், 7 சிறுகதைத் தொகுதிகளும், 22 கட்டுரைத் தொகுதிகளும், 8 சிறுவர் இலக்கிய நூல்களும், சில மொழி பெயர்ப்பு நூல்களும் எழுதி வெளியிட்டுள்ளார்.

அன்ரோனியோ கிராம்சி (Antonio Gramsci), லூயிஸ் அல்தூசர் (Louis Althusser), மற்றும் தியோடர் அடோர்னோ (Theodor Adorno) போன்றவர்களின் எழுத்துக்களால் ஈர்க்கட்டிருந்த அவர், மகாத்மா காந்தி மீதும் ஆர்வம் கொண்டிருந்தார். இருந்தாலும் அவரது எழுத்துக்கள் தெளிவாக மார்க்சிய தத்துவத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்தன. அவரது புனைகதை சாராத எழுத்துக்கள் கச்சதீவு, வியட்நாம், சிலி என பரந்த விடயங்கள் சார்ந்ததாக இருந்தன. 1987 முதல் 1999 வரை எழுதப்பட்ட அவரது 10 நாவல்கள் தமிழ் தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமானவை.

இந்த எழுத்தாளர் திருக்குறளையும் அர்த்த சாஸ்திரத்தையும் ஒப்பீடு செய்தும், மாக்கியவல்லியின் இளவரசரையும் பகவத் கீதையையும் ஒப்பீடு செய்தும் கட்டுரைகள் எழுதியுள்ளார். 1971 முதல் 1983 வரையான காலப் பகுதியில் 'குமரன்' என்ற பெயரில் இடதுசாரி – மார்க்சியம் தழுவிய சஞ்சிகை ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

கண்டியில் வாழ்கின்ற கல்வியாளரும், தமிழ் எழுத்தாளருமான எம்.ஏ.நுஃமான் கூறுகையில், "சில விமர்சகர்கள் அவருடைய எழுத்துக்கள் பிரச்சாரத் தன்மை வாய்ந்தவை எனக் கூறுகின்றனர். நான் கூறுகின்றேன், அரசியல் என்பது இலக்கியத்துடன் எந்த விவாக இரத்தும் செய்யவில்லை" எனச் சொல்லியுள்ளார். இலங்கையில் 1983 இல் நடைபெற்ற தமிழர் விரோத வன்செயல்களின் போது கணேசலிங்கனுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஒரு சிங்களக் குடும்பமே புகலிடம் வழங்கியது.

அவரை எளிமையான, தன்னடக்கமுள்ள, விவேகமுள்ள ஒரு மனிதர் என வர்ணிக்கலாம். 'த இந்து குழுமம்' என்ற தனியார் வெளியீட்டு நிறுவனத்தின் பணிப்பாளரும், கணேசலிங்கனின் நீண்ட கால நண்பருமான என்.ராம் அவரைப் பற்றிக் கூறுகையில், அவர் இலக்கியம், அரசியல், கலாச்சாரம் என்பனவற்றைப் பின்பற்றினார் எனக் குறிப்பிட்டார். மேலும் ராம் கூறுகையில், இலங்கையின் வாசனை வீசும் அவரது எழுத்தில் இருக்கும் தமிழ் மேலாதிக்கத்தன்மை இல்லாத தன்மையைத் தான் விரும்புவதாகக கூறினார்.

'இந்து' குழுமத்தால் வெளியிடப்படும் 'புரொன்ற் லைன்' (Front Line) என்ற இருவார இதழில் எழுதுவதற்கு கணேசலிங்கனுக்கு இடம் ஒதுக்கி கொடுக்கப்பட்டிருந்தது. அந்த இதழின் ஆசிரியர் ஆர்.விஜய சங்கர் குறிப்பிடுகையில், சில வருடங்களுக்கு முன்னர் வரை எங்கள் அலுவலகத்துக்கு தனது எழுத்துக்களைத் தருவதற்கு அவர் கிரமமாக வருவதுடன், அப்படி வரும்போது பலவிதமான விடயங்கள் குறித்து புதிய விடயங்களைக் கூறி உரையாடுவதும் அவரது வழக்கமாக இருந்தது எனத் தெரிவித்தார்.

(இது செ.கணேசலிங்கன் அவர்களது மறைவு குறித்து ரி.இராமகிருஸ்ணன் என்பவர் 'த இந்து' பத்திரிகையில் எழுதிய குறிப்பின் சாராம்சமாகும்)

---

13ம் பக்கத்தொடர்ச்சி...

வாழ்நாளைக் குறைக்கிறது. அசாஞ்சேவுக்கும் அதுதான் நடக்கிறது. முடிவடையாத நீதிமன்ற வழக்குகள் மனதளவில் மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்துகின்றன' என்று அசாஞ்சேவின் ஆதரவாளர்கள் கூறுகின்றனர். உண்மைதான். உண்மையை வெளிக்கொணர்ந்தற்காக எதிர்கொள்ளும் சித்திரவதையானது எவரையும் மனச்சிதைவுக்கு ஆளாக்கிவிடும். அசாஞ்சேவுக்கு ஏற்படும் எந்த ஆபத்தும் ஜனநாயகத்துக்கான இழிவாகவே அமையும்.

ஜனநாயக உரிமைகள், தாராள மதிப்பீடுகளுக்கான தூதர்களாகத் தங்களை வெளிப்படுத்திக்கொள்ளும் மேற்கு நாடுகள் விசிலூதிகளுக்கான சட்டபூர்வ பாதுகாப்பை உருவாக்குவதே நம் காலத்துக் கருத்துரிமையின் அடுத்தகட்ட நீட்சியாக இருக்க முடியும். அரசின் முக்கியமான ரகசிய நகர்வுகளைத் தன்னலன் சார்ந்து ஒருவர் இன்னொருவருக்கு வெளிப்படுத்துவதும், சமூக நலன் கருதி பொதுவில் பத்திரிகையாளர்கள் அம்பலத்துக்குக் கொண்டுவருவதும் ஒன்று இல்லை. விசிலூதிகள் நவீன சமூகத்தின், பத்திரிகைச் செயல்பாட்டின் முக்கியமான அங்கங்கள். அவர்களுடைய உயிர்ப்பான செயல்பாடு ஜனநாயகத்துக்கு முக்கியம். அசாஞ்சே உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்.

**நன்றி: அருஞ்சொல்**

**முன்பக்கத்தொடர்ச்சி...**

வழக்குத் தாக்கல் செய்து அந்த மாகாண சபையை வெவ்வேறான இரு மாகாண சபைகளாகப் பிரிப்பதற்கும் வழிகோலியது. இதிலிருந்து வாயளவில் சோசலிசம் பேசும் ஜே.வி.பி., இலங்கைத் தமிழர்களை ஒரு தேசிய இனமாக ஏற்கவில்லை என்பதும், அவர்களுக்கு எந்த வடிவத்திலும் சுயாட்சி உரிமை வழங்கப்படக்கூடாது என்பதும் அதன் கொள்கை என்பது தெளிவாகின்றது.

மறு பக்கத்தில், மாகாண சபைகள் உருவாவதை தமிழர்களின் பிரதான ஆயுதப் போராட்ட இயக்கமான விடுதலைப் புலிகளும் ஏற்கவில்லை. தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு தனித்தமிழ் நாடே ஒரேயொரு தீர்வு எனக் கூறிய புலிகள் இயக்கம், அதற்கான ஆயுதப் போராட்டத்தைத் தொடர்ந்தது. அது மட்டுமின்றி, இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தி, மாகாண சபைகள் அமைந்து செயற்படுவதை உறுதிப்படுத்த வந்த இந்திய அமைதிப்படையுடனும் புலிகள் யுத்தம் புரிந்தனர். அதற்காக, ‘எதிரிக்கு எதிரி நண்பன்’ என்ற அடிப்படையில், மாகாண சபை அமைவதை வன்மையாக எதிர்த்த சிங்கள இனவாதியான பிரேமதாசவின் அரசாங்கத்திடம் பணமும் ஆயுத தளபாடங்களும் பெற்று இந்திய அமைதிப் படைக்கு எதிராகப் போரிட்டனர். அது மாத்திரமின்றி, பிரேமதாச அரசின் மூலம் இந்திய அமைதிப்படையைத் திருப்பி அனுப்பி, அவர் மூலம் வட கிழக்கு மாகாண சபையையையும் கலைக்கச் செய்து, வடக்கு கிழக்கின் முழு அதிகாரத்தையும் பலாத்காரமாகத் தாமே கைப்பற்றியதுடன், இறுதியில் பிரேமதாசவையும் மனித வெடிகுண்டு மூலம் கொலையும் செய்தனர்.

இந்தக் கட்டத்தில், 1976 இல் வட்டுக்கோட்டையில் மாநாடு கூடி தனித் தமிழீழக் கொள்கையை முதலில் பிரகடனம் செய்த தமிழர் விடுதலைக் கூட்டணி இரண்டும் கெட்டான் நிலைக்குத் தள்ளப்பட்டு, பெயருக்கு மாகாண சபைகளை ஏற்கும் நிலைக்குச் சென்றது. அதனால் ஆத்திரமடைந்த புலிகள் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான அமிர்தலிங்கத்தையும் யோகேஸ்வரனையும் சுட்டுப் படுகொலை செய்தனர். அதன் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியும், அதன் பிரதான பங்காளிக் கட்சியான தமிழரசுக் கட்சியும் மாகாண சபைகளை ஆதரிக்கும் நிலையிலிருந்து பின்வாங்கிக் கொண்டனர். இருந்தும் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினரான நீலன் திருச்செல்வம் 2000ஆம் ஆண்டில் அப்போதைய ஜனாதிபதி சந்திரிக கொண்டு வந்த ‘தீர்வுப் பொதி’க்கு ஒத்துழைத்ததால் அவரையும் புலிகள் மனித வெடிகுண்டு மூலம் கொலை செய்தனர்.

இன்னொரு பக்கத்தில், மாகாண சபைகள் வடக்கு கிழக்கில் வாழ்ந்த முஸ்லீம் மக்களுக்கு எவ்வித அதிகாரத் பகிர்வையும் வழங்காது, அங்கு வாழ்கின்ற தமிழர்களின் மேலாதிக்கத்தை மட்டும் உறுதி செய்கிறது என்று கூறிய சிறீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ், அங்கு வாழ்கின்ற முஸ்லீம்களுக்கு தனியான அதிகார அலகு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் எனக் கூறி மாகாண சபை முறைமையை நிராகரித்தது.

இந்தச் சூழ்நிலையில் தனிநாட்டுக்கான ஆயுதப் போராட்டத்தைத் தொடர்ந்த புலிகள், ஒரு கட்டத்தில் சில அரசியல் தேவைகளுக்காக முன்பு தமக்கு எதிராக இருந்த சில தமிழ் கட்சிகளைச் சேர்த்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற புதியதொரு கூட்டணியை உருவாக்கினர். தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவான நாளிலிருந்து ‘புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள்’ என அது சொல்லி வந்ததுடன், ‘மாகாண சபைகள் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு அல்ல’ என்றும் கூறி வந்தது. புலிகள் அழிக்கப்பட்ட பின்பும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபைகள் பற்றி எவ்விதமான தெளிவான நிலைப்பாட்டுக்கும் வரவில்லை. இடையிடையே தமது பழைய சமஸ்டி பற்றிப் பேசினர் அல்லது மொட்டையாக தமிழ் மக்களுக்கு நீதியான தீர்வு கிடைக்க வேண்டும் எனக் கூறி வந்தனர்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில்தான் சில தமிழ், முஸ்லீம் கட்சிகளைச் சேர்த்துக் கொண்டு, மாகாண சபைகளுக்கு தேர்தல் நடாத்தி அவற்றை இயங்க வைக்க வேண்டும் எனச் சொல்ல ஆரம்பித்துள்ளனர். அதுவும் இலங்கைப் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் இவர்கள், இந்தப் பிரச்சினை பற்றி பாராளுமன்றத்தில் குரல் எழுப்பாது, இலங்கை அரசாங்கத்துடன் பேசாது, இந்தியாவுக்கு மட்டும் வேண்டுகோள் விடுப்பது, இந்தியா மீது எப்போதும் சந்தேகம் கொண்டிருக்கும் பெரும்பான்மையான சிங்கள மக்களைக் குழப்பி விட்டு, இனப் பிரச்சினைக்கான தீர்வை மழுங்கடிக்கவா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

அதை விடவும் முக்கியமான விடயம், முன்பு மாகாண சபை முறையை எதிர்த்த தமிழ் தேசியக் கூட்டமைப்பும், சிறீலங்கா முஸ்லீம் காங்கிரசும் இப்பொழுது மாகாண சபைகளை இயங்கச் செய்ய வேண்டும் எனக் கோருவது இதய சுத்தியானதா என்ற கேள்வி எழுகிறது. இவர்கள் இப்பொழுது மாகாண சபை முறை தமிழ் பேசும் மக்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்கக்கூடியது என்பதை ஏற்றுக் கொள்கிறார்களா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். அதை விடுத்து மக்கள் மத்தியில் தமது இழந்த செல்வாக்கைத் திரும்பவும் நிலைநாட்டவும், சிங்கள மக்களை உசுப்பிவிட்டுத் தமது இனவாத அரசியலை முன்னெடுக்கவும் இந்த நாடகத்தை ஆரம்பித்துள்ளார்களா என்றும் சந்தேகிக்க இடமுண்டு.

தற்போதைய சூழலில், இலங்கை அரசியல் அமைப்பில் இடம் பெற்றுள்ள, நடைமுறையில் இலங்கை மக்கள் சகலராலும் ஏற்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கின்ற மாகாண சபைகள் முறைதான் சிறந்ததொரு அதிகாரப் பகிர்வு முறைமை. அதை எல்லா சிறுபான்மையினக் கட்சிகளும் ஐக்கியப்பட்டு, இலங்கையிலுள்ள ஏனைய முற்போக்கு மற்றும் ஜனநாயகக் கட்சிகளுடனும் இணைந்து இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்துவதே சரியான வழிமுறை. இதற்கு இந்த முறையைக் கொண்டு வருவதில் பங்களித்த இந்தியாவிடம் உதவி பெறுவதில் தவறில்லை என்ற போதிலும், முதலில் இது சம்பந்தமாக இலங்கை அரசுடன் பேசுவதுடன், மக்களின் ஆதரவையும் பெற வேண்டும்.

இதற்கான முன் நிபந்தனைகளாக இருப்பவை இரண்டு விடயங்கள். ஒன்று, முதலில் மாகாண சபை முறைமையை சகல சிறுபான்மை இனக் கட்சிகளும் மனப்பூர்வமாக ஏற்க வேண்டும்.

இரண்டாவது, இது சம்பந்தமாக ஒருவர் பாக்கியில்லாமல் சகல சிறுபான்மையினக் கட்சிகளையும் கூட்டிப் பேச வேண்டும்.

அதை விடுத்து உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதும், சிலர் கூடிக் கதைத்துவிட்டு முழுமையான ஐக்கியம் உருவாகிவிட்டது என்று பீற்றுவதும் தீர்வுக்கு இட்டுச் செல்லா.

# ஐ.நா. இலங்கையுடன் நெருக்கமாகப் பணியாற்றுகிறது!

ஐக்கிய நாடுகள் சபை இலங்கையுடன் எப்போதும் மிக நெருக்கமாகச் செயல்பட்டு வருகிறது என ஐ.நாவின் உதவி செயலாளர நாயகம் காலித் கியாரி (Khaled Khiari) தெரிவித்திருக்கிறார். காலித் கியாரி ஐ.நாவின் அரசியல், சமாதானக் கட்டுமானம் மற்றும் சமாதான நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருந்து வருகிறார்.

இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட அவர், ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவை நொவம்பர் 25ஆம் திகதி சந்தித்த பின்னரே மேற்கண்ட கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

கடந்த செப்ரெம்பரில் ஐ.நாவின் 76ஆவது கூட்டத் தொடரில் கலந்து கொள்ள நியூயோர்க் சென்ற ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச, அங்கு ஐ.நா. பொதுச் செயலாளர் நாயகம் அன்ரோனியோ குற்றறெஸ் (Antonio Guterres) அவர்களைச் சந்தித்து உரையாடியிருந்தார்.

அச்சந்திப்பின் போது, போரால் பாதிக்கப்பட்டோருக்கு நட்டஈடு வழங்கல், காணிகளை மீளக் கையளித்தல் மற்றும் 2009ஆம் ஆண்டில், மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் வழிகாட்டலின் கீழ் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்ட பாரிய அபிவிருத்திகள் மற்றும் வடக்கு மாகாண சபைக்கான உறுப்பினர்களை, ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுப்பதற்காக ஏற்படுத்திக்கொடுத்த வாய்ப்பு தொடர்பிலும், ஜனாதிபதி அவர்கள் பொதுச் செயலாளரிடம் எடுத்துரைத்தார்.

மேலும் காணாமற்போனோர் தொடர்பில், அரசாங்கம் என்ற ரீதியில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை விரைவில் முன்னெடுப்பதாகவும் மரணச் சான்றிதழ்களை வழங்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதாகவும், பொதுச் செயலாளரிடம், ஜனாதிபதி உறுதியளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



உதவி செயலாளர நாயகம் காலித் கியாரி

பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த இளைஞர்களில் பலரை, தான் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் விடுவித்துள்ளதாக எடுத்துரைத்த ஜனாதிபதி அவர்கள், அவ்வாறு விடுவிக்க முடியாத ஏனையோர் தொடர்பான வழக்கு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு வருவதாகவும் நீண்ட காலமாகத் தடுப்பிலுள்ள தமிழ் இளைஞர்கள் தொடர்பிலான சட்டச் செயற்பாடுகள் முடிவடைந்த பின்னர், நீண்ட காலம் தடுப்பில் இருந்ததைக் கருத்திற்கொண்டு, ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பேரில் அவர்களை விடுவிப்பதற்குத் தான் தயங்கப் போவதில்லை என்றும், பொதுச் செயலாளரிடம் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி பொதுச் செயலாளரைச் சந்தித்ததின் தொடர்ச்சியாகவே, உதவிச் செயலாளர் நாயகத்தின் தற்போதைய இலங்கை விஜயம் அமைந்துள்ளது.

இந்த விஜயத்தின் போது ஐ.நா. செயலாளர் நாயகத்தின் வாழ்த்துக்களை ஜனாதிபதி ராஜபக்சவுக்கு உதவி செயலாளர் நாயகம் தெரிவித்ததுடன், சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதில் இலங்கை ஜனாதிபதியின் ஆர்வத்தையும் நடவடிக்கைகளையும் பெரிதும் பாராட்டினார்.

இந்தச் சந்திப்பின் போது, இலங்கைக்கு கொவிட் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு ஐ.நா. வழங்கி வரும் உதவிக்கு ஜனாதிபதி ராஜபக்ச நன்றி தெரிவித்ததுடன், ஐ.நாவின் பல்வேறு முகவரங்கள் இலங்கைக்கு அளித்து வரும் உதவிகளுக்கும் நன்றி தெரிவித்தார். அத்துடன், இலங்கை மேற்கொண்டு வரும் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்தும் உதவிச் செயலாளர் நாயகத்துக்கு விளக்கிக் கூறினார்.

இந்தச் சந்திப்பின் போது இரு தரப்பினரும் இலங்கையில் சமூகங்களுக்கிடையில் நிலவும் உறவுகள் குறித்தும் கலந்துரையாடினர்.

இதன் போது கருத்துத் தெரிவித்த இலங்கை ஜனாதிபதி, இலங்கையில் நீதி அமைச்சராக ஒரு முஸ்லீம் இனத்தவர் இருப்பதாகவும், சட்ட மா அதிபராக ஒரு தமிழர் இருப்பதாகவும், அத்துடன் இவர்களைப் போன்ற பல்வேறு சமூகங்களைச் சேர்ந்தவர்கள் முக்கியமான பதவிகளை வகித்து வருவதாகவும் குறிப்பிட்டார். அத்துடன் அரசாங்கம் சமூகங்களுக்கிடையில் ஐக்கியத்தைக் கட்டியெழுப்பும் மாபெரும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும், இது பற்றி யாரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை என்றும் குறிப்பிட்டார்.

மேலும் கருத்துரைத்த ஜனாதிபதி ராஜபக்ச, தென் ஆபிரிக்கா நிறவாதத்தை ஒழித்து தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதில் மேற்கொண்டு வரும் முயற்சிகளின் முன்னேற்றத்திலிருந்து பாடங்களைக் கற்று அதை இங்கும் நடைமுறைப்படுத்துவது பற்றி அக்கறை எடுத்து வருவதாகவும் குறிப்பிட்டதுடன், அதற்கு ஐ.நாவின் உதவியையும் எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது ஜனாதிபதி ராஜபக்சவுடன் இலங்கை அதிகாரிகளும், ஐ.நா. உதவிச் செயலாளர் நாயகத்துடன் ஐ.நா. அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.